Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு+II விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சிறியதோ,பெரியதோ, எந்த அளவுகளிலான
பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும்
எந்தநேரமும்
துரிதமாகவும் குறைந்த
கட்டணத்தில் அனுப்பிட
FedEx Express
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம் Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி - 03 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 05 (16.03.2005) புதன்கிழமை இதழ்:168

## அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டோரை

# இலங்கைக்கு திருப்பி அனுப்ப பிரிட்டிஷ் அரசாங்கம் திட்டம்!

(லண்டன்)

பிரிட்டனில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு பிரஜாவுரிமை வழங்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக் ஸ்ரோ கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரிட்டனுக்கு விஜயம் செய்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோவைச் சந்தித்துப் பேசிய போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது - பிரிட்டனில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களைத் திருப்பி அனுப்புவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் - இது தொடர்பாக நிலைமையை நேரில் ஆராய்வதற்காக பிரிட்டிஷ் உள்துறை அலுவலகப் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் ஜக் ஸ்ரோ தெரிவித்தார்.

# தமிழ் இளைஞர்கள் இருவர் வெலிகந்தவில் சுட்டுக்கொலை!

(பொலனறுவ)

பொலனறுவ மாவட்டத்திலுள்ள வெலிகந்த - கரப்பொல கிராமத்தில், தமிழ் இளைஞர்கள் இருவர் ஆயுதக்குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் செவனப்பிட்டிய - கரப்பொல கிராமத்துக்குச் சென்ற ஆயுததாரிகள் வீடொன்றுக்குள் சென்று அங்கிருந்த இளைஞர்களை கதைக்கவேண்டுமெனக் கூறி, வெளியே அழைத்துவிட்டு வீதியில் வைத்து சுட்டுக்கொன்றதாகத் தெரியவருகிறது.

மிக நெருக்கமாக வைத்து ரி -56 ரகத் துப்பாக்கியால் இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் சுப்பிரமணியம் குணசேகரன் (வயது18) செல்லத்துரை வேல்நாயகம் செல்வானந்தன் (வயது 22) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வெலிகந்த பொலிஸார் விசாரணைகளை நடத்திவரும் அதேவேளை - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சமாதான முயற்சிகளில் இருந்து

# நோர்வே அரசை ஓரம் கட்டுவதற்கு கொழும்பு அரசியலில் தீவிர முயற்சி!

(கொழும்பு)

சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வே அரசாங்கத்தை முற்றாக ஒதுக்கித்தள்ளுவதற்கான முயற்சிகள் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தீவிரம் பெற்றிருப்பதாகவும் -

இதன் ஒரு கட்டமாகவே சமாதான முயற்சிகளிலிருந்து விலகிக்கொள்ள நோர்வே முடிவு செய்திருப்பதாக நேற்றைய கொழும்புப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

பொதுக்கட்டமைப்பு உடன்பாடு குறித்து நோர்வே அரசு முன்வைத்த யோசனை குறித்து அரச தரப்பிடமிருந்து பதில் வராததையடுத்தும் - அரசாங்கத்தின் செயற்பாடுகளில் விசனமுற்றும் நோர்வே அரசு சமாதான முயற்சிகளிலிருந்து ஒதுங்கத் திட்டமிட்டிருப்பதாக கொழும்பு ஊடகங்கள் பரபரப்பான செய்திகளை வெளியிட்டன.

ஆனால், இந்தச் செய்திகளை நோர்வே முற்றாக மறுத்திருப்பதுடன் இது ஒரு விசமனத்தனமான செயல் என்றும் நாட்டை மீளக் கட்டியெழுப்புவது மற்றும் சமாதான முயற்சிகளை விரும்பாத சக்திகளின் செயல் என்றும் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நோர்வே அரசை சமாதான முயற்சிகளிலிருந்த ஒதுக்கிவிடுவதற்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜே.வி.பி. தலைவருக்கு உறுதிமொழி வழங்கியிருந்த நிலையில், நோர்வேயை தானாக ஒதுங்கவைக்கவே இத்தகைய முயற்சி எடுக்கப்பட்டதாக இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



நோர்வேயை அனுப்பிப்போட்டு சண்டைக்கு தயார்படுத்தப் போயினமோ...!

# பொதுக்கட்டமைப்புக்கு காலக்கெடுவா? நோர்வே தூதரகம் மறுப்புத் தெரிவிப்பு!

(கொழும்பு)

சுனாமி அனர்த்த நிவாரணங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக - ஏப்ரல் மாதத்திற்குள் முடிவு எடுக்கப்படாவிட்டால் போர் நிறுத்தம் முடிவடையும் என்று புலிகள் எச்சரித்திருப்பதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் வெளியிட்ட செய்தியை நோர்வேத் தூதரகம் மறுத்துள்ளது.

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகப் பேச்சாளர் கே.ரொம்ஸ்ட்டால் இது தொடர்பாகத் தெரிவிக்கையில் -

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை புனரமைப்பதற்கு அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து செயற்படவேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இதற்கமைய பொதுக்கட்டமைப்பு ஒன்றை நிறுவுவது தொடர்பாக நோர்வே செயற்திட்டம் ஒன்றை வகுத்து வருகிறது.

இந்த நிலையில் நோர்வேயும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இது தொடர்பாக அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாக செய்தி ஒன்றை நேற்று ஆங்கில நாளிதழ் வெளியிட்டிருந்தது.(12 ஆம் பக்கம் பார்க்க)

# கனடிய எம்.பிக்கள் புலிகளுடன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை இன்று கிளி நொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று காலை 9 மணியளவில் கிளிநொச்சி வரும் கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவை தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் திட்டமிடல் செயலகத்தில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவர்.

# பேச்சுக்கள் தேக்கமடைவதற்கு அரசாங்கமே முழுக் காரணம்!

## கனேடிய குழுவிடம் கூட்டமைப்பு எம்.பிக்கள் விளக்கம்



(யாழ்ப்பாணம்)

பேச்சு வார்த்தையை மீள ஆரம்பிக்காது அதனை தேக்க நிலையொன்றுக்குள தள்ளியிருப்பதற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் - கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தனர்.

நேற்று யாழ். நகரில் கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்களான மாறியாமின், யோகோ மாதில், பெறட்லி, செனட்த் ஜோசப்டே ஆகியயோரைச் சந்தித்து பேச்சு நடத்தியபோதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தகவல் வெளியிடுகையில் -

பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயமே ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களை பறித்தெடுத்தார். இதனையடுத்து பேச்சுவார்த்தை (12 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டு அரச ஊழியர்களுக்கு கணினிப்பயிற்சி வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சித் திணைக்களம் யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு கணினி பயற்சி வழங்க நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரியவருகிறது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களின் கணினி தொடர்பான அறிவை வளர்க்கும் நோக்குடன் அவர்களது திறனை மேலும் வளர்க்கும் நோக்குடனும் இந்த கணினி பயிற்சியை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இன்று பெரும்பாலான அரச திணைக்களங்கள் கணினிமயமாகி வருவதைக் கருத்திற்கொண்டும், பெரும்பாலான திணைக்களங்களில் கணினி மூலம் அலுவல்கள் இடம்பெற்றுவருவதைக் கருத்திற்கொண்டும் இவர்களுக்கு இவ்வாறு கணினி பயற்சி அளிப்பதன் மூலம் உத்தியோகத்தரின் திறனை அதிகரிக்கமுடியும்.

இந்தப் பயிற்சிநெறி எதிர்வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. ஒவ்வொரு திணைக்களங்களிலிருந்தும் இருவர் வீதம் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவர். அத்துடன் தொடர்ந்து சுழற்சி மூலம் ஏனைய உத்தியோகத்தவர்களுக்கும் பயிற்சி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரச உத்தியோகத்தர்களுக்கு கணினிப் பயிற்சி வழங்குவற்காக மாவட்டத்தின் பல இடங்களிலும் பயிற்சி நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டு அந்தந்த திணைக்களங்களுக்கு அருகில் உள்ள நிலையங்களில் பயிற்சி வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## பண்டத்தரிப்பு உப அலுவலகத்தில் ஆயுர்வேத வைத்திய பிரிவு நேற்றுமுதல் ஆரம்பம்

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு உபஅலுவலகத்தில் புதிய ஆயுர்வேத வைத்தியசாலைப் பிரிவை கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேச சபைச் செயலாளர் பி.விக்டர் திறந்து வைத்தார்.

இந்த ஆயுர்வேத வைத்தியசாலை நேற்று முதல் தனது சேவையினைப் பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது. இந்த வைத்தியசாலையில் பணியாற்றுவதற்கு இரு சித்த மருத்துவப் பட்டதாரிகள், ஆயுர்வேத தொழிலாளி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள மக்களின் நன்மை கருதி இங்கு ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றினைத் திறக்குமாறு பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச சங்கமும், பல பொது அமைப்புக்களும் மானிப்பாய் பிரதேச சபையிடம் கடந்த பல வருடங்களாகக் கோரிக்கை விடுத்துவந்ததை அடுத்து இந்த வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டது. (100)

## கோட்டமட்ட போட்டி

நல்லூர் கோட்டமட்ட மெய்வல்லுனர் போட்டி இன்றும் நாளையும் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கோட்ட பாடசாலைகள் அனைத்தும் தங்களுக்கு அனுப்பப்பட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப பொறுப்பான ஆசிரியர்கள் மாணவ, மாணவிகளை அழைத்து வருமாறு நல்லூர் கோட்ட கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்.

## பிணைப்பணம் வழங்கல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் பிணைப்பணத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கான காசோலை வழங்கப்பட்டு வருவதாக நீதிமன்றப் பதிவாளர் வ.மார்கண்டு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜுலை மாதத்திற்கு முன்னர் பிணைப்பணத்திற்கு விண்ணப்பித்து தேவைப்பட்டியலில் கையொப்பமிட்டவர்களுக்கே தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

தேவைப்பட்டியலில் கையொப்பம் இட்டவர்களை நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தில் பிணைப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

## அதிபர் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்.கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு நாளை நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு நிகழ்வு இன்று

சுனாமி கடல் பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் இன்று காலை 11 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வடமராட்சி மாணவர் பேரவைப் பொறுப்பாளர் தயாளன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா, பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கான உபகரணங்களை வழங்குவார்.

இந்த நிகழ்வில் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இரு துவிச்சக்கரவண்டிகளும் வழங்கப்படவுள்ளன. (12)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### உயர்திரு க.ஆனந்தராஜா

(மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய உதவிப் பிராந்திய முகாமையாளர்)

இலங்கை வங்கியாளர் நிறுவனத்தால் வழங்கப்படும் 'Fellow of the Institute of Bankers' என்ற சிறந்த வங்கியாளருக்கான விருதை அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் திரு.சுனில் மெண்டிஸ் அவர்களால் வடமாகாணத்திலேயே தொடர்ந்து 28 ஆண்டுகள் சேவையாற்றிய திரு.க.ஆனந்தராஜா அவர்களுக்கு வழங்கப்பட்டதையிட்டு உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல விருதுகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

– யாழ்.நாதன்ஸ் சினிமா ஸ்தாபனத்தாரும்,
சங்கானை நிரஞ்சனாஸ் தியேட்டர் &
ஹாட்வெயர் ஸ்தாபனத்தாரும்,
ஈழத்து மக்களும்.

## சிறு விளம்பரம்

### கடை விற்பனைக்குண்டு

ஸ்ரான்லி வீதியில் கடை விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :– சிறி
தொலைபேசி : 0779004041 (பகல் நேரம்)
021–4590275 (மாலைநேரம்) (1091)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், திரிசா நடித்த
திருப்பாச்சி
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-3856)

### ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ்
லண்டன்
இயக்கம்: சுந்தர்.C
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
(சி-3859)

### நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது

விஜய், திரிஷா
பிரகாஷ்ராஜ்
நடித்த
'கில்லி'
கா.நே(பு.நே) 10.30 2.30 6.30 9.30
எமது அடுத்த இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான தாவடி மைந்தன் நடிக்கும்
விரைவில் எதிர்பாருங்கள் குருதேவா
(சி-3857)

### மனோகரா திரையரங்கு

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
மாறுபட்ட வேடங்களில்
சூர்யா, ஜோதிகா
மற்றும் பலர் நடித்த
மாயாவி
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)

### நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார், நமிதா, வடிவேலு, கபாலி
நடித்த
ஏய்
11.00, 3.00, 7.00, 10.00


# வேலைவாய்ப்புச் செய்திகள்

## நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு

நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சும், வடக்கு கிழக்கு மாகாண சபையும் இணைந்து சமூக அபிவிருத்தி நிபுணர், சுற்றாடல் நிபுணர்–முழுநேரம், பிரதி திட்டப்பணிப்பாளர் பதவி, சிவில் பொறியியலாளர், காணி நிர்ணய உத்தியோகத்தர், கணக்காளர் பதவி – முழுநேரம், உதவி கணக்காளர், திட்டச் செயலாளர், சமூக சேவை உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், நிர்வாக உத்தியோகத்தர், பிரதம எழுதுவினைஞர், தரவு பதியுனர், தட்டெழுத்தாளர், எழுதுவினைஞர், சாரதிகள், அலுவலக உதவியாளர் ஆகிய பணி நிலைகளுக்கு தகுதியும் அனுபவமும் வாய்ந்த பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தப் பதவிகள் தற்காலிகமானவை. அத்துடன் நியமனங்கள் ஒருவருட ஒப்பந்த அடிப்படையிலானவை. தேவையையும் செயற்படும் ஆற்றலையும் பொறுத்து ஒப்பந்த காலம் நீடிக்கப்படுமெனவும், நியமனம் பெறுவோர் வடக்கு–கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணப் பிரிவின் திட்டப் பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின்கீழ் பணிபுரிவர். தெரிவுசெய்யப்படுவோர் வடக்கு–கிழக்கு மாகாணத்தில் எட்டு மாவட்டங்களில் எந்தப் பகுதியிலாவது சேவையாற்ற வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18வயதுக்கு மேற்பட்டவராகவும், 60 வயதுக்குக் உட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும். 55வயதுக்குக் கீழ்ப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

## பிரதேச சுற்றாடல் அதிகாரிகள்

பிரதேச சுற்றாடல் அதிகாரிகளாக நியமிப்பதற்கு – தற்போது பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் பட்டதாரிகளிடம் இருந்து மத்திய சுற்றாடல் அதிகார சபை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

திருகோணமலை –10, மன்னார்–05, வவுனியா –04, அம்பாறை –13, மட்டக்களப்பு–03, யாழ்ப்பாணம்–12, முல்லைத்தீவு–04, கிளிநொச்சி–04 என வடக்கு–கிழக்கில் 55 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

பௌதீகவியல், உயிரியல், பொறியியல், சுற்றாடல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், ஊடகவியல், தொடர்புசாதனவியல், புவியியல் விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒன்றில் பட்டம் பெற்றிருப்பதுடன், 45 வயதுக்குட்பட்டவராக இருத்தல்வேண்டும்.

இந்தப் பதவிகளுக்கு 2005–03–28ஆம் திகதிக்குமுன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## எழுதுவினைஞர்

தேசிய கல்வி ஆணைக்குழுவில் எழுதுவினைஞர்–தரம் III இற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் – தமிழ்மொழி அல்லது சிங்களமொழி, ஆங்கிலமொழி / இலக்கியம் மற்றும் கணிதம் உள்ளிட்ட 05 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறுபாடங்களில் சித்திபெற்றிருக்கவேண்டும்.

அத்துடன் க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியும், கணினி அறிவும் இருத்தல் வேண்டும்.

35வயதுக்குட்பட்ட விண்ணப்பதாரிகள், பூரண விபரங்களுடன் கல்விச் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளை இணைத்து மார்ச 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக –

செயலாளர், தேசிய கல்வி ஆணைக்குழு, 223C, நாவல வீதி, நாரஹேன்பிட்டிய, கொழும்பு –05 என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

## அபிவிருத்தி உதவியாளர்

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு பட்டதாரிகளிடம் இருந்து அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

18–45 வயதுக்குட்பட்ட பட்டதாரிகள் இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். 31–03–2005 இற்கு முன்னர் செயலாளர், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு, 330 யூனியன் பிளேஸ், கொழும்பு என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

## சுருக்கெழுத்தாளர் ஆங்கிலம் (தரம் 1)

தேசிய கல்வி ஆணைக்குழு, சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) தரம் I இற்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

க.பொ.த. சாதாரண தரத்தில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் ஆங்கிலம் உட்பட 3 பாடங்களில் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திபெற்ற – சுருக்கெழுத்து நிமிடத்துக்கு 90 சொற்களும், தட்டெழுத்து – நிமிடத்துக்கு 40 சொற்கள் வேகம் கொண்டவராகவும் 5 வருட அனுபவம் பெற்றவராகவும் இருக்கவேண்டும்.

40 வயதுக்குக் குறைந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் மார்ச் 31ஆம் திகதிக்குள் கிடைக்கவேண்டுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

தேசிய கல்வி ஆணைக்குழு, 223 C, நாவல வீதி, நாரஹேன்பிட்டிய, கொழும்பு –05 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டள்ளது.

## தேங்காய் பிடுங்க ஏறியவர் தவறிவீழ்ந்து படுகாயம்!

(கொடிகாமம்)

தென்னை மரத்தில் தேங்காய் ப்றிப்பதற்காக ஏறியவர் தவறி விழுந்ததில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை 11 மணியளவில் கொடிகாமத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கச்சாய் வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த பீ. அல்லி முத்து (வயது 45) என்பவரே தலையிலும் கையிலும் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவத்தில் காயமடைந்தவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டதாக தெரியவருகிறது.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

மெலிஞ்சிமுனை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை காலை 10.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் – அதிபர் என்.நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் – பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.பாஸ்கரன் கலந்துசிறப்பிக்கவுள்ளார். (100)

# விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை மலையகம் அழைத்தது உண்மையே!

## 'லங்காதீப' பேட்டியில் சந்திரசேகரன்



(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை மலையகத்துக்கு வருமாறு உத்தியோகபூர்வ வேண்டுகோள் எதனையும் நான் விடுக்கவில்லை. ஆனால், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மலையகத்துக்கு வரவேண்டியது அவசியம் என்று புலிகளிடம் தெரிவித்ததாக மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் - லங்காதீப பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -**

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்மக்களின் உரிமைகளுக்காக போராடுகின்றவிடுதலைப்புலிகளின் ஆதரவுடன் மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்ற நிலைப்பாட்டில் நான் உறுதியாகவுள்ளேன். அந்த அடிப்படையில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மலையகத்துக்கு வருகைதந்தால் அவரை வரவேற்கத் தயாரென நான் தெரிவித்தேன்.

இதுபோலவே இலங்கை ஒரே நாடு என்ற நிலைப்பாட்டிலேயே அனைவரும் உள்ளோம். எனவே, காங்கேசன்துறை முதல் காலி வரையுள்ள அனைத்துப் பிரதேசங்களுக்கும் அனைவரும் செல்வதற்கு சுதந்திரமுள்ளது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தமது விருப்பப்படி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கின்றனர். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கொழும்புக்கு வந்தால் சமாதானப் பேச்சுக்கள் குறித்துக் கலந்துரையாடுகின்றனர்.

இதுபோன்ற நிலைமையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மலையகத்துக்கு வருவது சூழ்ச்சியெனத் தெரிவிப்பது இனவாத - சுயநலநோக்குடனான வெற்றுப் பிரசாரமாகும். இது போன்ற அறிக்கைகள் - தமிழ்மக்களுக்கு எதிராக சிங்கள மக்களை திருப்பும் நோக்குடையவை. ஆனால், சிங்கள மக்கள் மழலைகள் அல்ல.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அமைப்பு, மலையகத்துக்கு வந்து தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் இங்குள்ள மக்களின் அரசியல் சிந்தனைகளை போஷித்துக்கொள்ள முடியுமென நான் நம்புகிறேன்.

வடக்கு - கிழக்கு மக்கள் கடந்த ஐம்பது வருடங்களாக போராடிவருகின்றனர். இருந்தும் சமாதானப் பேச்சுக்கு வருவதற்கு அரசாங்கம் பல்வேறு நிபந்தனைகளை விதிக்கிறது.

இனவாத அமைப்புக்கள் அனைத்துவேளைகளிலும் சந்தேகக் கண்ணோடுதான் தமது கவனத்தைச் செலுத்துகின்றன. பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய தேவை அவர்களுக்கில்லை.

வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களைப் போன்று இந்திய வம்சாவளித் தமிழ்மக்கள் 15 லட்சம் பேரளவானோர் தமது எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு அரசியற்பாதைக்கு வரவேண்டும். இதுபோன்ற கருத்தோடுதான் வடக்கு-கிழக்கு மற்றும் மலையகத்திற்கிடையே இணைப்பை ஏற்படுத்த முயற்சி செய்தோமே தவிர, ஆயுதப் பயிற்சி வழங்குவதற்கு அல்ல.

மலையகத்துக்கு வருமாறு தமிழ்ச்செல்வனுக்கு எந்தவொரு உத்தியோகபூர்வ அழைப்பையும் நான் விடுக்கவில்லை. ஆனால், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மலையகத்துக்கு வருவது அவசியமானதென நான் தெரியப்படுத்தியுள்ளேன்.

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடிய சந்தர்ப்பத்தில் நான் இது குறித்துத் தெரிவித்தேன். வடக்கின் தலைவர்கள் கிழக்கிற்கு வரவேண்டுமென்பது கௌசல்யனின் பிரதான கோரிக்கையென தமிழ்ச்செல்வன் கூறிய போது - கிழக்கிற்கு மாத்திரமல்ல மலையகத்திற்கும் வரவேண்டுமென நான் அவரிடம் கூறினேன் என அவர் தெரிவித்தார்.

## அரச ஊழியர்களுக்கான கடன் திட்டம் விரைவில்!

(கொழும்பு)

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் உறுதியளிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான கடனுதவித் திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடனுதவித் திட்டத்துக்கான சுற்றுநிருபம் இந்தமாத இறுதியில் அரச திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அபிவிருத்தி அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் உறுதியளிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கான இந்த கடனுதவித் திட்டம் அமுல்படுத்தப்படாமல் காலதாமதப்பட்டுவந்ததால் அரசாங்க உத்தியோகத்தர்கள் விசனமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுநாயக்கதாக்குதல் சம்பவம்; ஐந்து பேருக்கு எதிராக வழக்கு!

கட்டுநாயக்கவிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் இருந்த விமானப்படைக்குச் சொந்தமான எட்டு விமானங்களை அழித்தும், 25 விமானங்களுக்குச் சேதம் விளைவித்ததுடன், ஸ்ரீலங்கன் விமானக் கம்பனிக்குச் சொந்தமான விமானங்களை அழித்தது தொடர்பாகவும் 5 பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் கொழும்பு உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

211 குற்றச்சாட்டுக்களின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள இந்த வழக்கை ஏப்ரல் 26 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்த உயர் நீதிமன்ற நீதிபதி ஐ.எம்.அபேரட்ண-பிரதிவாதிகளை அன்றைய தினமே நீதிமன்றில் பாரப்படுத்துமாறுகோரும் அழைப்பாணையை சிறைச்சாலை ஆணையாளருக்கு அனுப்பியுள்ளார்.

இரட்ணசிங்கம் புஸ்பகுமார் அல்லது பொன்னுத்துரை நிர்மலரஞ்சன் அல்லது மன்சூர், விக்ரர் அல்பிரட் டொமினிக், சுப்பிரமணியம் தவராஜசிங்கம், நாகேந்திரம் நாகரட்ணம், தனபாலசிங்கம் ஜெயலஷ்மி ஆகிய ஐவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதிக்கும், 2001 ஆம் ஆண்டு ஜுலை 24 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் வவுனியாவிலும், நீர்கொழும்பிலுமிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் மீது தாக்குதல் தொடுப்பதற்கான திட்டங்களைத் தயாரித்தமை, அதன்படி கட்டுநாயக்க விமானத்தளம் மீது தாக்குதல் நடத்தி இராணுவ, விமானப் படையினர் 7 பேரைக்கொன்றதுடன், மேலும் 14 பேர் காயமடைவதற்கும் இவர்கள் ஒத்துழைப்பு வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு தாக்குதல் நடத்தி விமானப் படையினரின் 8 விமானங்களை அழித்தமை, மேலும் 5 விமானங்களுக்குச் சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளும் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் விமானப் படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் இரண்டு, மிக் விமானம் ஒன்று, M117 ரக ஹெலிகொப்ரர்கள் இரண்டு மற்றும் K8 ரக ஆகாய விமானங்கள் மூன்று என்பன முற்றாக அழிக்கப்பட்டன. வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக 412 பேர் சாட்சிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், வழக்குச் சான்றுப் பொருட்கள், பதிவேடுகள் அடங்கலாக 247 பொருட்களும் சேர்க்கப்படடுள்ளன.

## ஊடக அமைச்சு, அரச ஊடகங்கள் ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில்

### செயலணி மூலம் நிர்வகிக்க திட்டம்

(கொழும்பு)

ஊடகத்துறை அமைச்சையும், அரசாங்க ஊடக நிறுவனங்களையும் ஜனாதிபதி நேரடியாகத் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள செயலணி ஒன்று ஊடகத்துறை விடயங்களைக் கையாளும். ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் கணேகொட, ஜனாதிபதியின் செயலாளர், அரச ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்டுள்ள இருவரும் இந்தச் செயலணியில் அங்கம் வகிக்கவுள்ளனர்.

இந்த விடயம் குறித்துத் தற்போது வெளிநாடுப் பயணம் மேற்கொண்டுள்ள ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுடன் - ஜனாதிபதி கலந்தாலோசிக்கவில்லை எனத் தெரியவருகிறது.

ஊடகத்துறையில் மேற்கொள்ளப்படும் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் என அனைத்து விடயங்களும் இந்தச் செயலணியின் ஊடாகவே மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் எழுத்து மூல ஆவணமாக ஊடகத்துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையிலான இந்தச் செயலணி இன்று தனது முதலாவது சந்திப்பை நடத்தவுள்ளது.

ஜனாதிபதிக்கும் - ஜே.வி.பினருக்கும் இடையில் முரண்பாடுகள் வலுப்பெற்றுள்ள நிலையில் ஜே.வி.பியினருக்குச் சார்பாகச் செயற்படும் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் ஊடகத்துறை அமைச்சு இருப்பது அரசியல் நலன் சார்ந்த விடயங்களுக்குப் பாதகமாக அமையும் என ஜனாதிபதி கருதுவதாகவும், இதனையடுத்தே இந்த அவசர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவருகிறது.

ஜே.வி.பியினர் நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டுவர எத்தனிப்பதாகவும், இதற்கு ஊடகத்துறை அமைச்சின் பங்களிப்பு அவசியம் என்பதால் - அமைச்சர் மங்கள சமரவீரவுடன் நல்லுறவைத் பேணி வருவதாகவும் வெளியான தகவல்கள் ஜனாதிபதி தரப்பைப் பீதியடையச் செய்துள்ளன.

ஆட்சிக் கவிழ்ப்பு ஒன்று இடம்பெறலாம் எனவும் சில ஊடகங்கள் வெளியாகிய நிலையில், ஜனாதிபதி அவசர நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும், விரைவில் மேலும் பல அதிரடி நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(தே)

## ஜனாதிபதியின் கூற்றுக்கு சுதந்திரக்கட்சி சட்டத்தரணிகள் கடும் கண்டனம் தெரிவிப்பு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி விரும்பினால் வெளியேறலாமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்ததை தாம் கண்டிப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் காலி கிளையின் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்த சங்கத்தில் கடைசியாக நடந்த கூட்டத்தில் ஜனாதிபதியின் இந்தக் கருத்து தொடர்பாக கண்டனம் தெரிவித்து ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளது.

கடந்த தேர்தலில் பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறுமாக இருந்தால், பொதுமக்களுக்கு இவை தொடர்பாகத் தெரியப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் இந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

அண்மையில் அத்தனகலவில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி - அரசாங்கத்திலுள்ள ஜே.வி.பி. வெளியேற விரும்பினால், வெளியேறிச் செல்லலாமெனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


## முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஹுசைன் பைலா நீக்கம்!

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரதி அமைச்சர் ஹுசைன் பைலா நீக்கப்பட்டுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடிய முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் இந்த முடிவை அறிவித்தது.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஹுசைன் பைலாவை கட்சியிலிருந்து உடனடியாக நீக்கியுள்ளதாக கட்சியின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

இதேவேளை - முஸ்லிம் காங்கிரஸின் மாற்றுக்குழுவாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிசாத் பதியுதீன், நஜீப் ஏ மஜீத் மற்றும் அமிர் அலி ஆகியோருக்கு 10 நாட்கள் கால அவகாசம் வழங்குவதற்கும் கட்சியின் உயர்பீடம் தீர்மானித்துள்ளதாக ஹசன் அலி மேலும் தெரிவித்தார்.





ஆறு கோரிக்கைகளை முன்வைத்து திருகோணமலை மக்கள் நேற்று முன்தினம் நடத்திய மறியற் போராட்டத்தில் வீதிகளில் பெண்கள் அமர்ந்திருப்பதையும் - சமையலில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

# கொல்கத்தா டெஸ்ட் இன்று ஆரம்பமாகிறது




(கொல்கத்தா)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் இன்று தொடங்கவுள்ளது.

முதல் டெஸ்ட்டில் எதிர்பாராதவிதமாக டிரோ கண்ட இந்தியா மிகவும் விழிப்புடன் ஆடத் திட்டமிட்டுள்ளது.


இந்த நிலையில் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் முதலில் துடுப்பாட்டத்தில் இறங்கும் அணிக்கே சாதகமான பலன்கள் கிடைக்கும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் கிழக்கு மண்டல மைதானம் மற்றும் மைதானக்குழுவின் உறுப்பினர் பிரபீர் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டித் தொடருக்கு தேர்ந்தெடுக்கப்பட் டுள்ள மொஹாலி, ஈடன் கார்டன், பெங்களூர் ஆகிய மூன்று மைதானங்களே துடுப்பாட்டத்துக்கு ஏற்ற மைதானங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மொஹாலியில் வெற்றிபெறுவதற்கான பொன் னான வாய்ப்பை இழந்துவிட்டோம்.

இதனாலேயே ஈடன் கார்டனில் வெற்றியைப் பறிக்க வேண்டும் என்ற வேகம் இந்திய வீரர்களிடம் கொழுந்து விட்டு எரியும் என இந்திய அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட் தெரிவித்தார்.

## சதுரங்கப் புதிர்



**இன்றைய கேள்வி:**

கறுப்பு விளையாடுபவர் முதல் நகர்த்தி வெள்ளையை இரு நகர்த்தல்களுக்குள் வெல்லவேண்டும்

*(விடை நாளை)*

**நேற்றைய கேள்விக்கான விடை:**

பின்வரும் நகர்த்தலைச் செய்து கறுப்பானது தனது வெற்றியை இலகு படுத்துகிறது.

1... $Rxa_3$ + 2.. $Qxa_3 Nc_4$ + வெற்றி

**தொகுப்பு - சி. வித்தியாதரன்.**

## இந்திய அணியில் ஹர்பஜன்; ஜோன் ரைட் தெரிவிப்பு!



இன்று கொல்கத்தாவில் ஆரம்பமாகவுள்ள இந்திய -பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஹர்பஜன் சிங் விளையாடுவதற்கான சாத்தியம் உள்ளதாக இந்திய அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கொல்கத்தா மைதானத்தில் இறுதியாக நடந்த அவுஸ்ரேலிய மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கெதிரான போட்டிகளில் விளையாடிய ஹர்பஜன் சிறப்பான முறையில் விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். எனவே பாகிஸ்தான் அணிக்கெதிரான இன்றைய போட்டியில் ஹர்பஜன் விளையாடுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளது.

மொஹாலியில் நடந்த முதலாவது டெஸ்ட்போட்டியில் இறுதி நேரத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தது ஏமாற்றத்தை அளிக்கிறது. இன்று தொடங்கவுள்ள டெஸ்ட் போட்டியில் வெற்றி பெறவேண்டுமென்பதில் வீரர்கள் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர் என அவர் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் அணியில் பெரும் மாற்றமிருக்காது

### பயிற்சியாளர் பொப் வூல்மர்



(கொல்கத்தா)

இன்று தொடங்கவுள்ள இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட்போட்டியில் பாகிஸ்தான் அணியில் பாரிய மாற்றமிருக்காதென பயிற்சியாளர் பொப் வூல்மர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இன்று தொடங்கவுள்ள டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியில் ஐந்து பந்து வீச்சாளர்கள் இடம்பிடிக்க வாய்ப்புள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டியில் கம்ரன் அக்மல் சிறப்பாக விளையாடியதே பாகிஸ்தான் அணியில் ஐந்தாவது பந்து வீச்சாளரை இணைக்கும் எண்ணத்தை அணி நிர்வாகத்திற்கு ஏற்படுத்தியது.

போட்டி சரித்திரங்களை அதிகம் நான் பார்ப்பதில்லை. மொஹாலி டெஸ்ட் போட்டிக்குப் பின்னர் பாகிஸ்தான் அணி தன்னம்பிக்கையை பெருமளவில் பெற்றுள்ளது. அடுத்து வரும் டெஸ்ட் போட்டிகளில் இரண்டு அணிகளுக்கும் சம அளவில் வெற்றி வாய்ப்புள்ளது.

கடந்த நவம்பர் மாதம் ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த இந்திய கிரிக்கெட் சபையின் பவளவிழாவுக்கான ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றமையானது பலமானதாக அமையும். இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி சிறப்பாக விளையாடும். பெங்களூர் டெஸ்ட் போட்டிக்கு சொகைப் அக்தரை இணைக்கவேண்டுமென பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஐ.சி.சி சம்பியன் போட்டியை இந்தியாவில் நடத்துவதில் சிக்கல்

2006 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கு சிக்கல் எழுந்துள்ளது.

2006 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி.சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது இந்த போட்டி இந்தியாவில் நடப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் உருவாகியுள்ளன.

சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டிக்காக இந்திய அரசிடம் வரி விலக்கு கேட்கப்பட்டது. ஆனால் இது வரையில் இந்திய அரசிடமிருந்து எந்தவிதமான அறிவிப்பும் வெளியிடப்பட வில்லை.

வரிவிலக்கு கிடைக்காவிட்டால் இந்தியாவில் ஐ.சி.சி சம்பியன் கிண்ண கிரிக்கெட் நடக்காது என்று ஐ.சி.சி தலைவர் இஷான்மணி தெரிவித்தார். இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்க சிறப்புக்குழு புது டெல்கியில் இன்றும் நாளையும் விவாதிக்கவுள்ளது.

## பிரதேச செயலக போட்டிகளில் வெற்றிபெற்ற கழகங்கள்!

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேசத்துக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி முடிவுகள் வருமாறு -

ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 1 ஆம் இடத்தை வெக்ரர் விளையாட்டுக்கழகமும், 2 ஆம் இடத்தை விபுலானந்த விளையாட்டுக்கழகமும் பெற்றன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் 1 ஆம் இடத்தை மனோகரா விளையாட்டுக்கழகமும், 2 ஆம் இடத்தை பொம்மேர்ஸ் விளையாட்டுக்கழகமும் பெற்றன.

ஆண்களுக்கான எல்லே போட்டியில் 1 ஆம் இடத்தை மனோகரா விளையாட்டுக்கழகமும், 2 ஆம் இடத்தை ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றன.

பெண்களுக்கான எல்லே போட்டியில் 1 ஆம் இடத்தை மனோகரா விளையாட்டுக்கழகமும், 2 ஆம் இடத்தை பொம்மேர்ஸ் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.

## வலய மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகள்

(வடமராட்சி)

வடமராட்சி வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டம், கிரிக்கெட், வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கரப்பந்தாட்டத்தில் 15 வயதுப்பிரிவில் 1 ஆம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும், 2 ஆம் இடத்தை விக்னேஸ்வராக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் பெற்றன.

17 வயதுப்பிரிவில் 1 ஆம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும், 2 ஆம் இடத்தை இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும், 3 ஆம் இடத்தை வேலாயுதம் மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

19 வயது பிரிவுக்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 1 ஆம் இடத்தை அமெரிக்கன் மிசன் கல்லூரியும், 2 ஆம் இடத்தை விக்னேஸ்வராக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை தும்பளை சைவப்பிரகாச மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுப்பிரிவில் 1 ஆம் இடத்தை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலையும், 2 ஆம் இடத்தை வட இந்துமகளிர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் பெற்றன.

17 வயதுப்பிரிவில் 1 ஆம் இடத்தை வட இந்து மகளிர் கல்லூரியும், 2 ஆம் இடத்தை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலையும், 3 ஆம் இடத்தை கம்பர்மலை வித்தியாலயமும் பெற்றது.

19 வயதுப்பிரிவில் 1 ஆம் இடத்தை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலையும், 2 ஆம் இடத்தை வட இந்து மகளிர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை விக்னேஸ்வரா கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

இந்தப் போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்ற பாடசாலைகள் மாவட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளதாக வடமராட்சி வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் தெரிவித்தார். (12)

## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி!

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டிகள் யாவும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும். இச்சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம், அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம், தோம்பு வாலிபர் விளையாட்டுக் கழகம், புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம், கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம், சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக் கழகம் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொள்ளவுள்ளன.

## யாழ். கோட்ட பாடசாலை வலைப்பந்தாட்ட முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையில் கடந்த 8 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு -

15 வயதுப் பிரிவு

1 ஆம் இடம் - வேம்படி மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் - திருக்குடும்ப கன்னியர்மடம், 3 ஆம் இடம் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

17 வயதுப் பிரிவு

1 ஆம் இடம் - வேம்படி மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் - திருக்குடும்ப கன்னியர்மடம், 3 ஆம் இடம் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

19 வயதுப் பிரிவு

1 ஆம் இடம் - வேம்படி மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம் - திருக்குடும்ப கன்னியர்மடம்

## நொஸ்டொக் - 100 ரெனிஸ்; சானியா நேரடியாக தகுதி!



(ஹைதராபாத்)

சர்வதேச வீராங்கனைகள் பங்கேற்கும் நொஸ்டொக் - 100 ரெனிஸ் போட்டியில் பங்கேற்பதற்கு இந்திய வீராங்கனை சானியாவுக்கு நேரடித் தகுதி வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச வீராங்கனைகள் அனைவரும் பங்கேற்கும் நொஸ்டொக் - 100 ரெனிஸ் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஏப்ரல் 3 ஆம் திகதி வரை அமெரிக்காவில் உள்ள மியாமி நகரில் நடக்கவுள்ளது. இந்தப் போட்டியில் கலந்து கொள்ள இந்திய வீராங்கனை சானியா மிர்சாவுக்கு நேரடித் தகுதி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் 200 ஆவது இடத்திலிருந்த சானியா தொடர்ச்சியாக பெற்ற பல வெற்றிகள் காரணமாக தற்போது 77 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவில் வாழும் இந்திய வீராங்கனை நேகா ஓபராயுக்கும் போட்டிக்கான நேரடித்தகுதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சானியா நிருபர்களிடம் கூறுகையில் -

அவுஸ்ரேலிய ஓபன் போட்டிக்கு அடுத்தபடியாக நான் பங்கேற்கவுள்ள முக்கியமான போட்டி இதுவாகும். குறைந்தபட்சம் 2 போட்டிகளிலாவது வெற்றிபெறவேண்டும் என்ற இலக்கு வைத்துள்ளேன். சர்வதேச தரவரிசையில் முன்னணி இடத்தைப் பிடித்துள்ள அனைத்து வீராங்கனைகளும் இந்தப் போட்டியில் கலந்து கொள்கிறார்கள் என்றார்.



# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005

01. கீழே காணப்படும் உரைப்பகுதியை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மேல் எழுதுக.

கண்ணன் உயர்ந்த மலையுச்சியில் பிறந்தான். பிறந்தது முதல் பயணஞ்செய்ய ஆரம்பித்தான். உயர்ந்த மலையுச்சியில் இருந்து கீழே விழும்போது கண்ணன் மிக அழகாகக் காட்சியளிக்கிறான். எனச் சகலரும் கூறுவர். வெள்ளை வெளேரென்ற நுரையைப் பரப்பிக் கொண்டு கண்ணன் சுற்றாடலை அழகுள்ளதாக ஆக்குகின்றான். ஒரு சந்தர்ப்பத்தில் அமைதியாகவும் மற்றோர் சந்தர்ப்பத்தில் வேகமாகவும் பயணம் செய்யும் கண்ணன் பாரிய நீர்த்தேக்கத்தில் இளைப்பாறுவான். அங்க தேங்கி நிற்கும்போது கண்ணனது வலிமையின் எல்லையானது குறிப்பிட முடியாத அளவு பாரியதாகும். நாட்டுக்கே நலனை வழங்கும் 'நீர் மின்சக்தி' உங்களுக்குக் கிடைப்பது கண்ணனிடமுள்ள வரையறையற்ற வலிமையினாலாகும்.
பாதையின் இரு மருங்கிலும் உள்ள தோட்டம் துரவுகளை வளமுள்ளதாக்கி முழு நாட்டுக்கும் சுகத்தை ஈட்டித் தருகின்றான். பெரிய நாகராஜாவைப் போன்று ஊர்ந்து செல்லும் எமது குளிர்மையால், பெரிய - சிறிய சகலரும் நிம்மதியடைகின்றனர். இறுதியில் கடல் இராணியின் மடியில் விழும் கண்ணன் எப்போதும் மரணிக்கவே மாட்டான்.

1. இவ்வுரைப்பகுதி எதனைப் பற்றிக் கூறுகிறது?
..........................................................................

2. 'மலை' என்ற சொல்லின் ஒத்தசொல் இரண்டு தருக?
..........................................................................

3. பந்தியில் காணப்படும் வினைச்சொல் இரண்டை எழுதுக?
(1).......................... (2)..........................

4. பந்தியில் காணப்படும் அடைமொழிகள் இரண்டை எழுதுக?
(1).......................... (2)..........................

5. 'ஆரம்பித்தான்' என்பதை நிகழ்கால வடிவில் எழுதுக.
..........................................................................

6. மலையுச்சியில் என்பதன் பன்மைச் சொல்லில் எழுதுக?
..........................................................................

7. குளிர் என்ற சொல்லுக்கு எதிர்க்கருத்துள்ள வேறோர் சொல் தருக.
..........................................................................

8. 'கடலை நோக்கி நகர்கின்றேன்' வாக்கியத்தின் எழுவாயை எழுதுக.
..........................................................................

9. பயணஞ் செய்யும் என்பதைப் பிரித்து எழுதுக.
..........................................................................

10. பந்தியிலுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக.
..........................................................................

02. கீழே காணப்படும் ஒவ்வோர் தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.

1. உணவு : .............. 2. மலை : ..............
3. பூனை : .............. 4. பெரிய : ..............

03. கீழ்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் கருத்தை தமிழ்ச்சொல்லில் எழுதுக

1. GOOD NIGHT : .............. 2. WATER : ..............
3. LUNCH : ..............
4. PRINCIPAL : ..............

04. மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

1. தாவர வளர்ச்சிக்கு அவசியமானது
(1) மண் (2) ஆகாயம் (3) சூரிய ஒளி (4) பூமி

2. மனிதனுக்கு நோய் நொடிகளை ஏற்படுத்தும் பிராணி
(1) மண்புழு (2) நுளம்பு
(3) வண்ணாத்துப்பூச்சி (4) பூனை

3.  இவ்வுருவில் காணப்படுவது பிரிந்த இலைகள் உள்ள தாவரம்
(1) வேம்பு (2) புளி (3) மா (4) பப்பாசி

4. நமது நாட்டின் தேசிய விளையாட்டு எது?
(1) எல்லே (2) கரப்பந்தாட்டம்
(3) கிளித்தட்டு (4) கரம்

5. நீரைச் சுத்திகரிப்பதற்காக நாம் பயன்படுத்தும் இரசாயனப் பொருள்
(1) குளோரின் (2) அயடின் (3) உப்பு (4) இரும்பு

6. பிரதான வீதி ஒன்றின் குறுக்காக மாறும்போது நாம் பார்க்க வேண்டிய ஒழுங்குகள்
(1) வலம், இடம் , இடம் (2) இடம், வலம், இடம்
(3) வலம், இடம், வலம் (4) வலம், வலம், இடம்

7. இலங்கை மக்களின் பிரதான உணவு
(1) பாண் (2) சோயா
(3) நெல்லரிசிச்சோறு (4) முட்டை

8. இப்போது இலங்கையில் பெரும்பான்மை மக்களின் மொழி எது?
(1) தமிழ் (2) சிங்களம்
(3) சமஸ்கிருதம் (4) ஆங்கிலம்

9. இலங்கையின் 'சுதந்திரதின விழா' கொண்டாடப்படும் தினம்
(1) பெப்ரவரி 04 (2) ஜனவரி 01
(3) டிசம்பர் 31 (4) மே 01

10. மரம், செடி, கொடி, புல், பூண்டு என்பன
(1) விலங்கு வகை (2) ஊர்வன
(3) தாவரவகை (4) ஊனுண்ணிகள்



27. i) மாணவர்கள் வருகையைக் கண்ட ஆசிரியர் எழுந்து நின்றார்.
ii) ஆசிரியர் வருகையைக் கண்ட மாணவர்கள் எழுந்து நின்றனர்.
iii) ஆசிரியர் வகுப்பறைக்கு வந்ததும் மாணவர்கள் சத்தமிட்டனர்.

28, 29, 30 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றை வாசித்து அதன் கருத்தைத் தெளிவுபடுத்தும் வாக்கியத்தின் கீழ்க் கோடுக.

28. வீதியோரத்தில் சிலர் கூடிநின்று ஆரவாரம் செய்தனர்.
i) அவர்கள் பாடல் பாடினர்.
ii) குழப்பம் விளைவிக்கும் போது சத்தமிட்டனர்.
iii) மாலையிட்டு மகிழ்ந்தனர்.

29. 'பெண் புத்தி பின்புத்தி'
i) பெண்களுக்கு மூளை பின்பக்கமாயுள்ளது.
ii) பெண்கள் பின்பக்கம் பேசுவார்கள்.
iii) நிதானமின்றி முடிவெடுத்தல்.

30. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
i) ஐந்தில் வளையும் ஐம்பதில் வளைய முடியாது.
ii) ஐம்பதில் வளையத் தேவையில்லை.
iii) சிறிய வயது முதலே நாம் பக்குவமாய் வளர்த்தெடுத்தல் அவசியம்.

பின்வரும் கவிதையைப் படித்து 15 ஆம் வினாவுக்கு விடை எழுதுக.

வண்ண வண்ண மல்லிகையே மலரே
வானின் நிலவே வாழியவே
சின்ன சின்ன சிறகினை விரித்து
சிரிக்கும் பறவைகள் வாழியவே

31. கவிதையில் இடம்பெற்றுள்ள அடுக்குத் தொடர்கள் இரண்டினை எழுதுக.
(1).......................... (2)..........................

32-33 ஆகிய வினாக்களில் கூறப்பட்ட நிகழ்வுகளை சரியாக ஒழுங்குபடுத்திய முறையை தரப்பட்ட ஆங்கில அட்சரங்களின் விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.


32. பிரியாவுக்கு நண்பியின் தகவல் அறிய ஆவல்
A. தொலைபேசி எண்களை ஒவ்வொன்றாகச் சுழற்றினாள்.
B. தொலைபேசியின் அருகே சென்றாள்.
C. நண்பியின் தொலைபேசி எண்ணைத் தேடிப்பார்த்தாள்.
D. நண்பியின் தொலைபேசி அலறுவது கேட்கிறது.
E. நண்பியுடன் கதைக்கிறாள்.

i) ABCDE ii) CBADE iii) CDBA

33. அஸ்வாக் கொலாஜ் சித்திரமொன்றை ஆக்க முயற்சிக்கிறான்.
A நிறக் கடதாசிகளையும், பசையையும் பெற்றுக் கொண்டான்.
B படத்தின் எல்லைகளைக் குறித்துக்கொண்டான்.
C நறுத் தாள்களை சிறு சிறு துண்டுகளாக கிழித்துக்கொண்டான்.
D கடதாசித் துண்டுகளை அழகாக ஒட்டுகிறான்.

i) ABCD ii) ACBD iii) CDBA

கீழே தரப்பட்டுள்ள இரகசியக் குறியீட்டுக்குரிய எழுத்துக்களைக் கொண்டு குறியீட்டுக்குரிய சொற்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.




34. 

35. 

36 முதல் 40 வரையான வினாக்களில், பிரச்சினைகளைத் தீர்த்துக் கிடைக்கும் சரியான விடையின் கீழ் கோடிடுக.

36. ரேகா ஓரிடத்திலிருந்து வடக்கு நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தனது இடதுகைப் பக்கம் திரும்பி நடந்து, மீண்டும் வலது பக்கம் திரும்பி நடந்தாள். அவள பயணம் செய்த திசைகளாவன.
i) கிழக்குக்குச் சென்று, வடக்குகு
ii) வடக்குகுச் சென்று, கிழக்குகு
iii) இடது பக்கம் சென்று, வலது பக்கம்
iv) வலது பக்கம் சென்று, இடப் பக்கம்.

37. சஜத்குமாரின் உயரம் 125 சென்றி மீற்றர். சேரனின் உயரம் 1 மீற்றர் 05 சென்றி மீற்றர் இருவரில் மிக உயரமானவர் யார்? ..........................................................................


38. திவ்யாவின் அப்பா ரவி. சுஜிதாவின் அப்பா சுதா. ரவியும், சுதாவும் சொந்தாரனின் பிள்ளைகளாவர். அப்படியெனின், திவ்யா செந்தூரனுக்கு என்ன உறவு முறையாகும்?
..........................................................................

39. ஒரு பிள்ளைக்கு 5 விசுக்கோத்துக்கள் வீதம் சிரமதானத்துகு வந்த 2150 பிள்ளைகளுக்குக் கொடுக்கத் தேவையான விசுக்கோத்துகள் எத்தனை?
..........................................................................

40. இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை ஐந்து ரூபாய் வீதம் உண்டியலில் இடுவது சர்மியின் வழமையாகும். இந்த மாதம் 16 ஆம் திகதியன்று அவரது உண்டியலில் ரூபா 80 பணம் சோநதிருந்தது. அம் மாதம் ஆறாந் திகதியன்று அவ உண்டியலில் இருந்திருக்கக் கூடிய பணம் எவ்வளவு?
..........................................................................

கீழே தரப்பட்டுள்ள வாசகம் பற்றி சரியாகக் கூறும் கரத்திற்கு எதிரே சரி எனவும் பிழையாகக் கூறும் கருத்திற்கு எதிரே பிழை எனவும் எழுதுக.


வாசகம் : **எல்லா வைத்தியர்களும் அறிவாளிகள்**
**அறிவாளிகள் பாடசாலை சென்றவர்கள்**

41. எல்லா அறிவாளிகளும் பொறியியலாளர்கள் ஆவர் ( )
42. பாடசாலை சென்ற சிலர் அறிவாளிகள் ( )
43. 
..........................................................................

**T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd**
**ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்**

05. கீழே ஒவ்வோர் உருவிலும் காட்டப்படும் பழவகைகள் எந்தெந்தப் பழங்களுக்கு உரியன என்பதைத் தரப்பட்டுள்ள கூண்டில் இருந்து தெரிந்து கீழே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

அப்பிள், திராட்சைப்பழம், றம்புட்டான்பழம், மாம்பழம், கொய்யாப்பழம்



.......... .......... .......... .......... ..........

06. கீழே காணப்படும் ஒவ்வோர் சொற்தொகுதிக்கும் பொருத்தமான தனிச்சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து அதன் கீழ் கீறுக.

1. தேர்தல் ஒன்றில் போட்டி இடுபவர் (அங்கத்தவர் / வேட்பாளர்/ அதிகாரி)

2. வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்பவர் (பிரதிவாதி/ நிரபராதி/ வாதி)

3. ஒரு நூலுக்கு நூல் எழுதுபவரால் வழங்கப்படும் உரை (முன்னுரை/ அணிந்துரை/ சிறப்புரை)

07 கீழே உருவப்படங்களில் காட்டப்படுவது ஓர் பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டியில் நடைபெற்ற விளையாட்டுக்களாகும். அந்த ஒவ்வோர் விளையாட்டினதும் பெயரை எதிரே புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.





..................

..................

08. கீழே காணப்படும் ஒவ்வோர் கூற்றும் சரியாயின் √ என்றும், பிழையாயின் X என்றும் அடைப்புக்குறியினுள் இடுக.

1) நண்பர் ஒருவரின் வீட்டுக்கு நீங்கள் சென்ற போது அவ்வீட்டிலுள்ள நாய் உங்களின் முன்னால் வந்தால் நீங்கள் வேகமாக ஓட வேண்டும். (............)

2) மீனுக்கு நீரில் நீந்துவதற்கு செட்டைகள் உதவுகின்றன. (............)

3) உணவு சமைக்கும் போது அயடின் கலந்த உப்பைப் பயன்படுத்த வேண்டும். (............)


4) இறைச்சி மாச்சத்துக்கூடிய ஓர் உணவாகும். (............)

5) பலா மரத்தின் இலை இளம் பச்சை நிறமானது. (............)

6) குப்பை மேனி எனப்படும் தாவரம், செடி வகையைச் சார்ந்தாகும். (............)

7) உடம்பில் உள்ள ஆடையில் தீப்பற்றியதும் வேகமாக ஓடுவதனால் மிக விரைவில் நெருப்பு அனைந்து விடும். (............)

09.



1) இந்த உரு காட்டும் விளையாட்டு உபகரணம் யாது?

..................................................

2) இந்த உபகரனத்தைத் தயாரிக்க உதவும் இரண்டு பொருட்களின் பெயர்களைத் தருக?

1.......................... 2..........................

10. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க .

1) அகத்தின் அழகு ..................................

2) ..................................பாலும் புளிக்கும்.

11. கண்டி இரத்தினபுரி வீதியில் 04 ஆம் இலக்க வீட்டில் வதியும் திரு மயூரன கண்ணன், கொழும்பு 06 , காலி வீதியில் 219 ஆம் இலக்க வீட்டில் வதியும், திரு முஹமட் மன்சூர் என்பவருக்கு பதிவுத் தபால் மூலம் கடிதம் ஒன்றை அனுப்பினார். அவர் பெயர், முகவரி என்பவற்றை எழுதிய முறையை பின்வரும் கடித உறையில் எழுதிக் காட்டுக.

| அனுப்புதல் :- | சேரல் :- |
|---|---|
| .................... | .................... |
| .................... | .................... |
| .................... | .................... |

2) கடிதம் ஒன்றை பதிவுத்தபாலில் அனுப்பும் போது தற்போது ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி யாது?

..................................................

3) கடிதம் ஒன்றைச் சாதாரன தபாலில் அனுப்பும் போது ஒட்டப்பட வேண்டிய முத்திரையின் பெறுமதி யாது?

..................................................

4) தபால் அட்டை ஒன்றின் தற்போதைய விலை யாது?

..................................................

12. தாவரம் ஒன்றின் வளர்ச்சிக்கு சூரிய ஒளி அவசியமானது என்பதைக் காட்ட, நடத்தப்பட்ட பரிசோதனையின் ஐந்து கட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. எனினும் அந்த ஐந்து சந்தர்ப்பங்களும் ஒழுங்கின்றி மாறிக் கிடக்கின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தி, வரவேண்டிய ஒழுங்கு முறையை அடைப்புக் குறிக்குள் 1,2,3,4,5 என இலக்கமிட்டுக் காட்டுக.

1) அடுத்த சாடியிலுள்ள தாவரத்துக்கு ஒளி படாத வகையில் கறுப்பு நிறக் கடதாசியினால் மூடி ஒட்டுக. (..........)

2) இரண்டு தாவரங்களிலும் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா? என்பதை அவதானிக்குக. (............)

3) சாடிகள் இரண்டில் நடப்பட்ட ஒரேயளவான வளர்ச்சியுள்ள தாவரங்கள் இரண்டைத் தெரிவு செய்து கொள்க. (............)

4) ஒரு வாரத்தின் பின் கறுப்பு நிறக் கடதாசியினால் ஆன மூடியை அப்புறப்படுத்துக. (............)

5) அவற்றில் ஒன்றுக்குச் சாதாரணமாக ஒளி கிடைக்க ஒழுங்கு செய்க. (............)



13. கீழே உள்ள படவரைபின் மூலம், ஒரு பழ வியாபாரிக்கு ஒரு நாளில் விற்பனை செய்யப்பட்ட காய்கள் எண்ணிக் கையில் காட்டப்பட்டுள்ளன. அதன்படி கீழேயுள்ள வினாக்களுக்கு உரிய விடைகளை எதிரே புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.




* ஒரு காய் காட்டப்படும் பழங்களின் எண்ணிக்கை 8 ஆகும்.


1) மிகக் கூடிய அளவில் விற்கப்பட்ட பழவகை யாது? அதன் எண்ணிக்கை எத்தனை? ..................

2) பப்பாசிப்பழங்களை விட, எத்தனை அன்னாசிப் பழங்கள் கூடுதலாக விற்கப்பட்டன? ..................

3) அப்பிள் பழம் ஒன்று ரூபா 8 வீதம் விற்கப்பட்டது எனின், வியாபாரி அப்பிள் பழங்கள் விற்றதனால் பெற்ற வருமானத்தின் பெறுமதி யாது? ..................

4) வியாபாரி ஒரு மாம்பழத்தை ரூபா 6 வீதம் வாங்கி ரூபா 10 வீதம் விற்றார் எனின், அன்று அவர் மாம்பழங்கள் மூலம் பெற்ற இலாபம் எவ்வளவு? ..................

5) விற்பனை செய்யப்பட்ட அப்பிள் பழங்கள், விற்பனை செய்யப்பட்ட பப்பாசிப் பழங்களின் எத்தனை மடங்காகும்? ..................

14. 


1.இத்திண்மத்தின் பெயர் யாது?

2. இதில் எத்தனை உச்சிகள் உள்ளன?


3.இதில் எத்தனை விளிம்புகள் உள்ளன?

4. இதில் எத்தனை முகங்கள் உள்ளன?

5.இத்தகைய திண்மத்துக்கு ஓர் உதாரணம் தருக?

15. 

இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?

16. 

இந்தக் கடிகார முகம் காட்டும் நேரம் யாது?

17.

1.2 1/2 லீற்றரை மில்லி லீற்றரில் தருக ..................

2.250 சென்றிமீற்றரை மீற்றரில் தருக ..................

3.5000 கிராமை கிலோ கிராமில் தருக ..................

18.

1. 500 கிராம் சீனி ரூபா 20.00 எனின், ஒரு கிலோ சீனியின் விலை யாது? ..................

2.ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் ரூபா 18.00 எனின், 250 மில்லி லீற்றர் மண்ணெண்ணெயின் விலை யாது?


..................................................


3. 2 சென்றி மீற்றர் புடைவையின் விலை ரூபா 200 எனின், 1 1/2 மீற்றர் புடைவையின் விலை யாது?

19. 'சுனாமி' அனர்த்தத்தில் மக்கள் அடைந்த துன்பங்கள் என்ற தலைப்பில் கீழ் ஆறு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இருப்பதுடன், அந்த வாக்கியங்களில் எழுவாய், பயனிலைகள் திருத்தமான முறையில் அமைந்திருத்தலும் வேண்டும்)


20. கீழே தரப்பட்டுள்ள முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்களுக்கு தரப்பட்ட உருவிற்கு நெருங்கிய தொடர்புடைய சொல்லின் கீழ் கோடிடுக.

01. 
i) இதழ்
ii) காடு
iii) பூ

2. 
i) இருள்
ii) ஒளி
iii) உணர்வு


03. 
i) உயரம்
ii) நிறை
iii) நீளம்

21. கீழ் 4 ஆம், 5 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள ஒத்த உருவங்கள் இரண்டினைத் தெரிந்து உரிய ஆங்கில எழுத்துக்களின் கீழ் கோடிடுக.

04. 

A B C D E

i) A,B ii) A,E iii) C,D iv) B,E

05. 

A B C D E

i) A,D ii) A,B iii) B,D iv) D,E

22 ஆம் 23 ஆம் வினாக்களில் இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் நோக்குமிடத்து கருத்துப் புலப்படும் சொற்களை ஆக்கத் தேவையான எழுத்துக்களைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

22.

| | | |
|---|---|---|
| ப | | தி |
| க | | ட |
| மை | | லி |

i) த்,ட்,ய்
ii) ட்,ய்,வ்
iii) ன்,ல்,ண்

23..

| | | |
|---|---|---|
| அ | | பு |
| க | | தி |
| தி | | தி |

i) ன்,ர்,ல்
ii) த்,ல்,ன்
iii) ன்,த்,க

24 -25 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் குறிப்பிட்ட ஒரு கூட்டத்தைக் குறித்து நிற்கின்றது. அக்கூட்டத்தைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

24.. முரட்டுத்தனம், பிடிவாதம், அப்பாவித்தனம், நற்குணம்
i) பெயர் ii) வினை iii) சினைப்பெயர் iv)பண்புப்பெயர்

25. அதிபர் எனும் சொல்
i) ஆண்பால் ii)பெண்பால் iii) பலர்பால் iv) பொதுப்பால்

26-27 வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகவும் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

26.i) மான் கூட்டமொன்று வேடனைக் கண்டு ஓடின.
ii) மான்கூட்டத்தைக் கண்ட வேடன் மெல்ல மெல்லப் பதுங்கி நின்றன.
iii) பதுங்கி நின்ற வேடனைக் கண்ட மான் கூட்டம் ஓட்டமெடுத்தது.

## விடுகைப்பத்திரம் வழங்காதது குறித்து

# யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் குடும்பநல உத்தியோகத்தர் முறைப்பாடு

(பருத்தித்துறை)

மருத்துவமனையில் கடமையாற்றும் பதவி உயர்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர் ஒருவர், தனக்கு இடமாற்றம் வழங்க குறிப்பிட்ட மருத்துவமனை மறுப்பது தொடர்பாகவும் – தனக்கு உரிய தீர்வைப் பெற்றுதரக் கோரியும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாக்ரெட் என்பவரே இவ்வாறு முறையிட்டுள்ளார்.

முருங்கன் மருத்துவமனையில் கடமையாற்றும் இவர், அண்மையில் குடும்பநல உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்றதுடன், யாழ். கோப்பாய் மருத்துவமனைக்கு வடக்கு – கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினது அனுமதியுடன் இடமாற்றம் பெற்றார்.

ஆனால், இவர் தற்போது கடமையாற்றும் முருங்கன் மருத்துவமனைப் பணிப்பாளர் இவர் வைத்தியசாலையைவிட்டு விலகுவதற்கான விடுகைப் பத்திரத்தைக் கொடுக்க மறுப்பதாகத் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குறிப்பிட்ட மருத்துவமனையின் நிர்வாகத்திடம் தொடர்பு கொண்டு இவரது முறைப்பாடு தொடர்பாகக் கேட்டபோது – குறிப்பிட்ட வைத்தியசாலையில் ஊழியர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகவும், இதனால் இவருக்குரிய இடமாற்றம் வழங்கமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இவரது முறைப்பாடு தொடர்பாக இவருக்கு இடமாற்றம் பெற அனுமதி வழங்கிய சுகாதார அமைச்சு மற்றும் வடக்கு – கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு ஆகியோருடன் தொடர்பு கொண்டு மேலதிக விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்தவுள்ளது.

## வடமராட்சிப் பகுதியில்

# காணாமற்போன இரு மீனவர்கள் பருத்தித்துறை இராணுவ முகாமில்

வடமராட்சி கடற்பகுதியில் கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்று மூன்று நாட்களுக்கு முன் காணாமற்போன இரண்டு மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தமக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக, வடமராட்சி கடற்தொழிலாளர் சங்க சமாசம் தெரிவித்துள்ளது.

ஜோசப் பிரேமதாஸ் (வயது 38) மற்றும் சிவராஜ்பிரபு (வயது 24) ஆகியோரே கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

கடந்த சனிக்கிழமை மாலை 3 மணியளவில் மேற்படி இருவரும் கட்டுமரத்தில் தொழிலுக்குச்சென்றனர். எனினும் மறுநாள் காலை வரை இவர்கள் திரும்பாத காரணத்தால், இவர்களைத் தேடிக்கண்டு பிடிக்க எடுத்த முயற்சியும் தோல்வி கண்டது. இந்த நிலையில் மேற்படி இருவரும் காங்கேசன்துறைப் பகுதியிலுள்ள கடற்படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அத்து மீறிப் பிரவேசித்ததாகத் தெரிவித்து, கடற்படையினரால் நேற்றுமுன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் பருத்தித்துறை பொலிஸாரிடம் – கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டு, அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக, வடமராட்சி மீனவர் சங்க சமாசத்துக்குப் படையினரால் நேற்றுமுன்தினம் மாலை அறிவிக்கப்பட்டது.

அத்துடன் இவர்கள் இருவரும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விஷமிகளின் செயலால் புளியங்கூடலில் மின்தடை

(வேலணை)

வேலணை மின்சாரசபையால் புளியங்கூடல் பகுதிக்கு வழங்கப்பட்டுவரும் பகுதிநேர மின்சார வழங்கல் விஷமிகளின் செயலால் அடிக்கடி தடைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் சிலர்சட்ட விரோத மின்சாரம் பெறுவதும், மின்தடையை (பியூஸ்) கழற்றி விடுவதாலுமே மின்தடை ஏற்படுவதாகவும், இதுபற்றிப் பல தடவைகள் வேலணை மின்சாரசபையிடம் முறையிட்டும், நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை எனவும் இந்தப் பகுதி மின்சார பாவனையாளர் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இந்தப்பகுதிக்கு வழங்கப்படுவதும் மின்சாரம் வலுக்குறைந்ததாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (99)

# கடலேரியில் மீன்பிடிப்போர் மீது இராணுவத்தினர் கட்டுப்பாடு!

(யாழ்ப்பாணம்)

பண்ணைப் பாலத்தின் ஊடாக கடற்தொழில் மேற்கொள்ளச் செல்லும் கடற்தொழிலாளர்கள் மீது, இராணுவத்தினர் கட்டுப்பாடுகளை விதிக்கின்றமையால், கடற்தொழிலை முழுமையாக மேற்கொள்வதில் சிக்கல்கள் தோன்றியுள்ளதாகக் கடற்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

நாவாந்துறை, ஆனைக்கோட்டை, சாவற்கட்டு, காக்கைதீவு, உயரப்புலம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் பாலத்தின் ஊடாக அதிகாலை 3,4 மணிக்குச் செல்கின்றபோதிலும், தம்மை காலை 6 மணிக்குப் பின்பே அனுமதிப்பதாகக் கடற்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

திரும்பிவரும்போது படகுகள், வலைகளை சோதனை இட்டு நேரத்தை இழுத்தடிப்பதால், தம்மால் உரிய நேரத்துக்குக் கடல் உணவுகளைச் சந்தைப்படுத்த முடியவில்லையெனவும், காலை 9 மணிக்குப் பின்னரே வேறு இடங்களிலுள்ள சந்தைக்குத் தாம் மீன்களைக் கொண்டுசென்று விற்று வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (91)

# மீனவரிடம் கப்பமாகப் பெறும் மீன்களை வேறொருவர்மூலம் விற்கும் படையினர்!

காக்கைதீவு கடற்தொழிலாளர்களிடம் தமது தேவைக்கென மீன்களை வாங்கும் படையினர் – அதனை வேறொருவர்மூலம் விற்பனை செய்வதனால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

காக்கைதீவு, மீன் சந்தைக்கு அருகில் முகாம் அமைத்துள்ள இராணுவத்தினர் நாளாந்தம் தமது தேவைக்கென வள்ளங்களில் இருந்து எடுக்கும் கடல் உணவுகளை பிறிதொருவரது உதவியுடன் சந்தையில் வைத்து விற்பனை செய்துவருகின்றனர்.

நாளாந்தம் 10 கிலோவுக்கு மேற்பட்ட கடல் உணவுகளைத் தம்மிடமேவாங்கி–விற்பனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இந்தப் பகுதியில் கடற்தொழிலில் ஈடுபடும் சாவல்கட்டு, உயரப்புலம், காக்கைதீவு மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். (91)

## மானிப்பாய் அறநெறிப் பாடசாலையின்

# நான்காம் ஆண்டு நிறைவையொட்டி மாணவர்களிடையே போட்டிகள்!

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இந்த மாதம் 27 ஆம் திகதி மாணவர்களுக்கிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பேச்சுப்போட்டி, கட்டுரை, வினாவிடை, தேவார மனனம், நீதி நூல் மனனம், திருக்குறள் மனனம் ஆகியனவும், தொண்டுபடும் போட்டிகளாகக் கோலம் போடுதல், மாலை கட்டுதல் ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள நான்காம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் பரிசுகள் வழங்கப்படும்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாட சாலை அதிபருடன் தொடர்பு கொண்டு, விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறநெறிப் பாடசாலை அதிபர் கா.கணேசதாசன் அறிவித்துள்ளார். (101)

# திருநெல்வேலி பகுதியில் இளைஞர்குழு அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி, கல்வியங்காடு பகுதிகளில் கடந்தசில நாட்களாக இளைஞர் குழுக்களுக்கிடையேயான மோதல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை திருநெல்வேலி அரசடி அம்மன் ஆலயத்தடியில் மது போதையில் நின்ற இளைஞர் குழுவினர், வீதியால் சென்ற இளைஞர்களுடன் மோதியதாகவும், இதன் போது கல்வீச்சுக்களிலும், அடிதடியிலும் ஈடுபட்டதாகவும் தெரியவருகிறது.

ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக நின்ற இளைஞர் குழுவுடன், வேறொரு குழுவினர்வந்து வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு, அது பின் மோதலாக மாறியது.

கட்டப்பிராய்ச் சந்தியில் இரவு 8 மணியளவில் வீதியில் நின்ற இளைஞர்களுடன் வோறொரு குழுவினர் மதுபோதையில் வந்து, கதைத்துக் கொண்டு நின்றுவிட்டு மோதலுக்கு முயற்சி செய்து, வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இரவு 8.30 மணியளவில் திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் வீதியால் சென்றுகொண்டிருந்த இரண்டு குழுக்கள் வாள் வீச்சில் ஈடுபட்டதைக் கண்ட மக்கள் பீதியுடன் தமது சைக்கிள்களையும், மோட்டார் சைக்கிள்க்ளையும் விட்டுவிட்டு தப்பி ஓடினர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடராமல் பொலிஸார் பின்னர் கடமையில் ஈடுபட்டு, மக்களின் சுதந்திர நடமாட்டம், போக்குவரத்துக்கு உதவி செய்யவேண்டுமென்று பொது மக்கள் – சம்பந்தப்பட்டோரைக் கோரியுள்ளனர். (63)

## கணினி பயிற்சிநெறிக்கான நேர்முகத்தேர்வு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடத்தப்படவுள்ள இலவச கணினிப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு – இன்று மாலை 3 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, இதற்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரையும் நேர்முகத் தேர்வுக்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர் : ஜெ.நிதுஷா
முகவரி : அல்வாய் மேற்கு

# நீண்டகாலமாக திருத்தப்படாத மல்வம் புதுமடம் வீதி

(உடுவில்)

வலி.தென்மேற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்தின் பராமரிப்புக்குட்பட்ட மல்வம் புதுமடம் வீதி – கடந்த 30 வருடங்களுக்கு மேலாகத் தார் ஊற்றி செப்பனிடப்படாதுள்ளது.

சுமார் இரண்டு மைல் நீளமான இந்த வீதியால் தினமும் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் எனப்பலரும் பயணிப்பதால் அவர்கள் பலத்த இடை யூறுகளை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வீதியின் அவலநிலை பற்றிக் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக பல தடவைகள் அந்தப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (101)

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

# ஆலயக் கிணற்றினுள் கழிவுப்பொருட்கள்!

(உடுவில்)

உடுவில் புதுமடம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயக் கிணற்றில் கழிவுப் பொருட்கள் கொட்டி மூடப்படுவதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். இந்த ஆலயத்துக்கும், அயலில் உள்ள குடியிருப்பாளருக்கும் பங்காகவுள்ள இந்தக்கிணறு, தற்போது குடியிருப்பாளர்கள் பயன்படுத்துவதில்லை. இதனாலேயே இந்தக் கிணற்றை அயலிலுள்ள மக்கள் தேவையற்ற பொருட்களைக் கொட்டி மூடுவதாகத் தெரிவிக்கின்றனர்.

தற்போது இந்த ஆலயத்தில் புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்படுவ தால் இந்தக் கிணற்றையும் புனரமைக்க வேண்டியிருப்பதாகவும், இதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து நிதியைப்பெற்றுப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் ஆலய செயலாளர் நா.பொன்னுத்துரை தெரிவித்தார். (101)

# சின்னஞ்சிறு செய்திகள்

## பரிசளிப்பு விழா

(சுழிபுரம்)

பன்னாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா – இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.இரத்தினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக சங்கானைக்கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளர் கு.வி.கந்தசாமியும், கொழும்பு பிறைட் புத்தகநிலைய இயக்குநர் பொ.சக்திவேலும் கலந்துகொள்ளவுள்ளனர். (48)

## கலைமகள் சிலை திறப்பு விழா

(சுழிபுரம்)

பண்ணாகம் வடக்கு அரசினர் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கலைமகள் சிலை திறப்புவிழா இன்று காலை 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தச் சிலையையும், பாடசாலை மண்டபத்தையும் பண்ணாகம் வடக்கில் வாழ்ந்த அமரர் செல்லையா பாக்கியம் குடும்பத்தினர் அன்பளிப்புச் செய்துள்ளனர். (48)

# கிராமிய அபிவிருத்தி வங்கியின் சேவைகளை - மக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன்

(கிளிநொச்சி)

மக்கள் சேவைக்கென ஆரம்பிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி வங்கியை மக்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்தார்.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் 12 ஆம் ஆண்டு நிறைவையொட்டி கிளிநொச்சி, பூநகரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – 1993 ஆம் ஆண்டு இதே நாளில் ஆரம்பிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி வங்கி – தனது 12 ஆம் ஆண்டு கால செயற்பாட்டில் இதுவரையில் 11 கிளைகளை நிறுவியுள்ளது.

விவசாயிகள், பொதுமக்கள், மாணவர்கள் அனைவரும் இந்த வங்கியை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் சுய சார்புப் பொருளாதாரத்தை நோக்கி நகர முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு கிராமிய அபிவிருத்தி வங்கி முகாமையாளர் கௌரிசங்கர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை பூநகரி பங்குத்தந்தை றியோ ஆம்ஸ்ரோங், பூநகரி பெரும்போக உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றினார்.

தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் 9 பயனாளிகளுக்கு சூரிய மின்கலமும், 5 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும், ஒருவருக்கு நீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டன.

இந்த வங்கியில் சிறுவர்களுக்கான தளிர் சேமிப்புக் கணக்கில் கூடுதல் சேமிப்புச் செய்தவர்களுக்கான சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இதில் வங்கியின் வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## காணிகள் வழங்கப்படவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட காணியற்ற அரச ஊழியர்களுக்கு இதுவரை காணிகள் வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் கிளிநொச்சி நகர காணியற்ற அரச ஊழியர்கள் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதேவேளை காணியற்ற அரச ஊழியர்களுக்கு அறிவியல் நகரப் பகுதியில் காணி பகிர்ந்து வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது. எனினும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## மகப்பேற்று விடுதிகள் புனரமைப்பு பணிகள் ஸ்தம்பித நிலையில்!

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி, தேராவில், தர்மபுரம் ஆகிய கிராம வைத்தியசாலைகளில் அமைந்துள்ள மகப்பேற்று விடுதிகளின் புனரமைப்பு பணிகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளதால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இந்த மகப்பேற்று விடுதிகளின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நீண்ட காலமாகியும், ஒப்பந்தகாரரின் அசமந்தப் போக்கால் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாக்கப்படவில்லை. இதனால், கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் சிரமங்களையும், உயிராபத்துக்களையும் எதிர்நோக்கிவருகின்றனர். இதுதொடர்பாக வைத்திய அதிகாரிகள் மாகாண சுகாதார வைத்திய அதிகாரி த.சத்தியமூர்த்திக்கு பொதுமக்களின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## மார்ச் 16

1527 : இந்தியாவில் மொகலாயப் பேரரசு உதயமாக அடித்தளம் அமைத்த கான்வா போர் நடந்த நாள். ராணா சங்ராம் சிங்கிற்கும், பாபருக்கும் நடந்த இப்போரில் ராணாசங்ராம் தோல்வியுற்றார்.

1802 : அமெரிக்க காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட சட்டம் ஒன்றின்படி நியூயோர்க்கில் அமெரிக்க இராணுவப் பயிற்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

1912 : ரஷ்யாவின் மன்னர் ஷார் இரண்டாம் நிக்கோலஸ் முடி துறந்தார். இடைக்கால அரசு பதவி ஏற்றது. மன்னரின் அரண்மனை நாட்டுடமையாக்கப்பட்டது.

1921 : பிரிட்டனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது.

♦ : துருக்கியப் பிரதமமந்திரி மொகமது தலாத் பாஷா ஆர்மேரியர் ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார்.

1926 : திரவ எரிபொருளைப் பயன்படுத்தி பறந்த முதல் விமானத்தின் வெள்ளோட்டம் மாஸ சூஸட்ஸ் அருகில் நடந்தது. றொபேட் ஹட்சின்ஸ் கோட்டார்ட் என்பவரால் வடிவமைக்கப்பட்ட இந்த விமானம் 1.25 மீற்றர் உயரத்தையும், 15 சென்ரிமீற்றர் சுற்றளவும் உடையது.

1937 : இஸ்லாம் மதத்தின் பாதுகாவலர் எனக் கூறிக் கொண்டு முஸோலினி லிபியாவுக்கு சென்றார். அங்கு இவருக்கு இஸ்லாம் வாள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.

1939 : ஹங்கேரி ருத்மேனியாவை கைப்பற்றியது.

♦ : செக்கோஸ் லாவாக்கியாவின் ஒரு பகுதியான ஸ்லாவாக்கியா ஜேர்மனியினால் ஆக்கிரமிக்கப்பட்டது.

1966 : நீல் ஆம்ஸ்ரோங், டேவிற்ஸ்காட் ஆகிய இரு விண்வெளி வீரர்களுடன் ஜேர்மனி – 8 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது. பின்னர் ஏற்பட்ட கோளாறு காரணமாக பசுபிக் கடலில் இறங்கியது.

1968 : மைலாய் படுகொலை நிகழ்ந்த நாள். வியட்நாம் நாட்டின் கிராமங்களில் ஒன்றான ம்மலாய் கிராமத்தினுள் புகுந்த அமெரிக்கப் படையினர் அந்தக் கிராமத்தில் இருந்தவர்களில் 21பேரைத் தவிர மற்றைய அனைவரையுமே கொன்றழித்தனர்.

1969 : ரஷ்யாவினால் ஜனவரி 5 ஆம் திகதி அனுப்பப் பட்ட வீனஸ் – 5 என்ற விண்கலம் பூமிக்கு திரும்பியது.

1975 : மதீனா – 10 என்ற விண்கலம் மூன்றாவது முறையாகப் புதனுக்கு அருகில் சென்றடைந்தது.

1998 : ஹிங்குராக் கொடையில் பறந்து கொண்டிருந்த இலங்கை விமானப் படையினருக்கு சொந்தமான புக்காரா விமானம் நடுவானில் வெடித்துச் சிதறியது.

தொகுப்பு - சந்துரு





இலங்கை ஆசிரியர் சங்கத்தின் – வவுனியா மாவட்ட ஆசிரியர் சங்கத்தின் இடமாற்றம் தொடர்பாக கலந்துரையாடல் அண்மையில் வவுனியா அந்தோனியர் தேவாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளைத் தலைவர் ந.கிருஸ்ணராஜா, வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரி.ஜயசிங்க ஆகியோரை முதலாவது படத்திலும்,

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்களின் ஒரு தொகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

படம் - கனகரவி

# பெண்களைத் தொல்லை படுத்தும் இளைஞர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவு

(வவுனியா)

வீதிகளில் தேவையில்லாமல் கூடிநின்று மாணவிகள், பெண்களுக்குத் தொல்லை கொடுக்கும் இளைஞர்களுக்கு எதிராக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் விசேட பணிப்புரைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வாரம் கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தினத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையின் முதல் கட்டமாக மாலை 7.00 மணி முதல் 7.30 மணிவரையிலான வேளையில் தனியார் கல்வி நிலையங்கள் முக்கிய சந்திகள் என்பவற்றில் கூடி நின்றதாகக் கூறப்படும் 25 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, பொலிஸ் பிணையில் விடப்பட்டு, மறுநாள் வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப்பகுதியில் – முக்கிய சந்திகளிலும், கல்வி நிலையங்களுக்கு எதிரிலும் கூடி நிற்கும் இளைஞர்கள் மாணவிகள், பெண்களிடம் சேஷ்டைவிட்டு தொல்லைகள் கொடுத்து வருவதுடன், கோஷ்டிகளாக இணைந்து வன்முறைகளிலும், சமூக சீர்கேட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது தொடர்பாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

காலையில் மாணவிகள் பாடசாலைகளுக்குச் செல்லும் வேளையிலும், பெண்கள் அலுவலகங்களுக்குச் செல்லும் வேளையிலும், மாலையில் பாடசாலைகள், அலுவலகங்கள் முடிவடைந்த பின்னரும், தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்கள் செல்லும் வேளையிலும், அங்கிருந்து திரும்பும் வேளையிலும், மாலையில் 7 மணிக்குப் பின்னரும் இத்தகைய தொல்லைகள் இடம்பெறுவதாக முறைப்பாடு செய்யப்பட்டு வந்தது.

இதைத் தொடர்ந்தே இத்தகைய இளைஞர்களுக்கு எதிராக வீதிகளில் அலைந்து திரிபவர்களுக்கு எதிரான சட்ட விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் விசேட உத்தரவிட்டிருந்தார்.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட 17 இற்கும் 25 இற்கும் இடைப்பட் வயதுடைய 25 இளைஞர்களையும் அவர்களுடைய பெற்றோர்களின் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி, எதிர்வரும் 31 ஆம் திகதி இவர்கள் தொடர்பாக வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தார்.

கண்ணில் தென்பட்ட இளைஞர்களை பொலிஸார் கைது செய்ததாகவும், மருந்து வாங்கச் சென்ற ஒருவரையும், ஹோட்டல் ஒன்றில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது ஹோட்டலுக்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் இருக்கின்றதா என எட்டிப்பார்த்த ஒருவரையும், பொலிஸாரைக் கண்டதும் காரணமின்றி ஓட முயன்றவர்கள் மற்றும் தேவையில்லாமல் கூடிநின்றவர்களுடன் சேர்த்துக் கைது செய்துள்ளதாக சட்டத்தரணிகள் மூலமாக நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

சமூக சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கையின் போது தவறு ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்த நீதிபதி, இது குறித்து விசாரணைகளின் போது விசேட கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில், தெருக்களில் கூடி நிற்பவர்களுக்கும், கோஷ்டிகளாக இணைந்து செயற்படுபவர்களுக்கும் எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## புனரமைக்கப்படாத வீதிகள்

மன்னார் கூராய் கிராம மக்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதிக்கான பிரதான வீதி கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாது பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

அத்தோடு இந்தக் கிராமத்தில் எந்த ஒரு அடிப்படை வசதிகளும் பூர்த்தி செய்யப்படவில்லை.

இதனால், இந்தப் பகுதி மக்கள் தமது அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதாயின் புனரமைப்புச் செய்யப்படாத வீதியூடாகப் பெரும் சிரமத்தின் மத்தியில் தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கருத்தில்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## முன்பள்ளி திறப்புவிழா

கிளிநொச்சி நாகபடுவான் சோழநிலா முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வு – கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் செபமாலை தலைமையில் இடம்பெற்றது.

இங்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டதை அடுத்து, தமிழீழத் தேசியக் கொடியை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றிவைத்தார். முன்பள்ளி கட்டடத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த பாண்டியன் திறந்து வைத்தார். தொடர்ந்து கருத்துரைகள், சிறப்புரைகள் என்பன இடம்பெற்றன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*ஊழிபெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு ஆழி எனப்படு வார்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தீர்மானம் எடுக்க முடியாத அரசும் முடிவெடுக்கத் தயங்கும் ஜனாதிபதியும்

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கான சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பாக அமைதியை விரும்பும் சர்வதேச சமூகத்தவர்கள் ஆழ்ந்த அக்கறையுடனும், மிகுந்த பொறுப்புணர்வுடனும் கவனமெடுத்து வரும் சூழலில், மேற்படி அரசியல் ரீதியிலான நியாயமான தீர்வொன்றினை இலக்காகக் கொண்ட பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாக, இலங்கை அரசின் மீது வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் அழுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தெரிந்ததே...!

இந்த அழுத்தங்களை நேர்மையாகவும், நியாயமாகவும் எதிர்கொண்டு சமாதான பேச்சுக்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை தேசிய நலன் கருதிய நோக்கில் விசுவாசத்துடன் மேற்கொள்ளும் திராணியற்ற ஜனாதிபதியும், விருப்பற்ற அரசாங்கமும், கருத்தியல் தெளிவும், இறுக்கமுமற்ற முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகளை விடுத்தவண்ணம், சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர்களே சலிப்படைந்து நம்பிக்கையிழந்து போகும் அளவுக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது தான வேதனை தரும் விடயமாகும்.

மிகச்சாதாரணமானதும், அதேசமயம் மிகமிக அவசியமானதுமான சில நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கூட, அரசியல் அனுகூலங்களை எதிர்பார்க்கும் இலங்கையரசும், அதிகாரத்தலைமையும் - மிகவும் சிக்கலானதும், நீண்ட காலமாக புரையோடிப்போன தன்மையைக் கொண்டதுமான இனப்பிரச்சினை போன்ற விடயங்களுக்கு அரசியல் ரீதியில் பரந்த மனதுடன் பேச்சுவார்த்தை மேசையில் கலந்துரையாடித் தீர்க்க முன்வருவார்களா என்பது சந்தேகமே!

சுனாமி அனர்த்தங்களால் பெரும்பாதிப்புக்குள்ளான வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் நிவாரணப்பணிகளை துரிதமாக மேற்கொள்ள அவசியமான ஒரு பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதற்கு, மூன்று மாதகாலமாக மனமின்றி இழுத்தடிக்கும் இந்த அரசாங்கத்தினால் எந்த விடயத்திலும், அதாவது தமிழ்மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தவிர வேறு எந்த விடயத்திலும், அர்த்தமுள்ள ஆக்கபூர்வமான முடிவுகளை எடுக்கமுடியும் என எவரும் நம்புவது கடினமே!

வெளிப்படையாக தான் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வரத்தயார் என அறிக்கை விடுத்துவரும் ஜனாதிபதி - நோர்வே அரசால் கையளிக்கப்பட்ட, அதேசமயம் விடுதலைப்புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பு தொடர்பாக இன்னமும் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவில்லை என்றே தோன்றுகின்றது.

நோர்வே அனுசரணையாளர்கள் இக்கட்டமைப்பு தொடர்பாக அரசு ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளது என்ற தொனிப்படக் கருத்தினை வெளியிட்டுள்ள போதிலும், விடுதலைப்புலிகள் அரசின் பதிலுக்காக இன்னும் தாங்கள் காத்திருப்பதாகத் தெரிவித்துள்ளமையானது, அரச தரப்பில் இது தொடர்பாக ஒருமித்த கருத்து நிலைப்பாடு ஒன்றும் எட்டப்படவில்லை என்ற செய்தியையே குறிப்பதாகவுள்ளது.

அப்படித்தான் தவிர்க்க முடியாத சூழலில் இப்பொதுக கட்டமைப்பு தொடர்பாக ஒரு இணக்கப்பாட்டுக்கு அரசு வந்தாலும் கூட, அந்த உடன்படுகையின் அடிப்படையில் அரசு நேர்மையாக நடந்து கொண்டு, யுத்தத்தால் மட்டுமல்லாது 'சுனாமி'யாலும் கூட மிகப்பெரும் அழிவுகளைச் சந்தித்து நிற்கும் தமிழர் தாயகப் பகுதிகளுக்கான சர்வதேச உதவிகள் நியாயபூர்வமாக கிடைக்க வழி செய்யுமா என்பது சந்தேகமேயாகும்.

அரசின் உள்ளக முரண்பாடுகளும், ஜனாதிபதி ஜே.வி.பியினரின் பிடிக்குள் இருந்து இன்னமும் விடுபட முடியாத நிலைமையும், பொதுக்கட்டமைப்பு இடைக்கால நிர்வாகசபை போன்ற விடயங்களில் உடன்பாடுகளுக்கு அப்பாலும் அவற்றை நிறைவேற்றும் செயற்பாடுகளில் நியாயமாக அனைத்தும் இயங்கும் என்ற நம்பிக்கையைத் தருவதாக இல்லை.


மனிதாபிமான அடிப்படையிலான உதவிகள் தொடர்பான செயற்பாடுகளுக்கு இந்தளவு எதிர்ப்பும், கண்டனமும், ஆளும் கட்சிக்குள் இருக்கும் பேரினவாத வெறி கொண்ட அரசியல்வாதிகளால் தெரிவிக்கப்படும் நிலையில், தமிழ்மக்களின் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து பேசும் நிலை வரும்போது, இறுதித்தீர்வு குறித்தும் பேசவேண்டும் என்று வலியுறுத்தும் இவர்கள் எந்தளவு வெறியுடன் நடந்து கொள்வார்கள் என்பதற்கு கடந்த கால நிகழ்வுகளே சான்றாகும்.

பொதுக்கட்டமைப்பு என்பது விவாதத்திற்குரிய, அரசியல் ரீதியிலான சிக்கல்களுக்குரிய விடயமே அல்ல. இது வெறுமனே இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான அப்பாவி பொதுமக்களின் வாழ்வை புத்துயிர்ப்புக் கொள்ளவைப்பதற்கான பணிகளை, மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்வதற்கான ஒழுங்கமைப்பு திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு அமைப்பேயாகும்.

இதற்கே இந்தளவுக்கு எதிர்ப்பும், கண்டனமும் ஒரு அரசுக்குள்ளேயே எழுவதும், அதனை அடக்கமுடியாமல் ஒரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியே மௌனம் சாதிப்பதும், தேசத்தினதும், மக்களினதும் கஷ்டங்களிலும், வளர்ச்சிகளிலும், இவர்களது பொறுப்புணர்வின் அவலத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

நல்லநாடு, நல்ல அரசு, ஆனால் பாவம் மக்கள்....!

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# புலிகளின் விமானங்களால் கிலிகொள்ளும் புத்தபிக்குகள்!

"தமிழீழ விடுதலைப் புலிகளிடம் போர் விமானங்கள் அதுவும் நவீன விமானங்கள் இருக்கின்றன. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின் அவர்கள் போர்விமானங்களைப் பெற்றிருக்கின்றார்கள். விமான ஓடு பாதைகள் அமைத்திருக்கிறார்கள். புலிகளிடம் போர் விமானங்கள் இருப்பதால், இந்தப் பிராந்தியத்திலுள்ள நாடுகளின் பாதுகாப்புக்கே ஆபத்து. புலிகளின் போர் விமானங்கள் கொழும்பு நகரின் முக்கிய இடங்களைக் குண்டுபோட்டு அழித்துவிடுவம்."

தென்னிலங்கையில் இப்போது இந்தப் பீதி நிறைந்த கூச்சல் பல வட்டாரங்களிலும் தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இரண்டு தினங்களுக்கு முன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் புத்தபிரானின் வழிநடப்பதற்கு ஆசைகளைத் துறந்த புத்தபிக்குகளைக் கொண்ட ஹெல உறுமய என்ற அரசியல் கட்சியின் தலைவர் எல்லாவல மெத்தானந்ததேரர் கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றில் பேசுகையில் புலிகளின் விமானப் படை பற்றிய அச்சத்தை வெளியிட்டிருந்தார்.

போர்க்களத்தில் கொல்லப்பட்டும், ஊனப்பட்டும் கிடந்த வீரர்களையும், அவர்கள்பட்ட அவலங்களையும் வெற்றி வீரனாக நின்ற அசோகச் சக்கரவர்த்திக்கு எடுத்துக்காட்டி அவன் மனம் உருகும்படி அறிவுரைகூறிப் போரையே வெறுக்கச் செய்தவர் ஒரு புத்ததுறவி.

இங்கு ஹெல உறுமயவின் தலைவர் தங்களை அனுமதித்தால் தாங்கள் வன்னிக்குச்சென்று புலிகளின் விமானப்படையையே அழித்துவிட்டு வருவதாகச் சூளுரைக்கிறார்.

புத்தர் மீண்டும் அவதாரமெடுத்து வருவாராக.

இந்த அரசியல்பிக்குகளும்சரி, சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகளும்சரி, தென்னிலங்கை அரசியல்வாதி களும்சரி தமிழ் மக்கள் குட்டக் குட்டக் குனிந்துகொண்டு காந்தியின் சாத்வீகப் போராட்டத்தையே நடத்திக் கொண் டிருப்பார்களென்றே எதிர்பார்த்திருக்கிறார்கள்!

விடுதலைப் புலிகளிடம் போர் விமானங்களோ அல்லது விமானப் பொம்மைகளோ இருப்பதாகக் கேள்விப்பட்டதுமே இவர்களுக்கு ஏன் இவ்வளவு உதறல் எடுக்கவேண்டும்?

யாழ்ப்பாணத்தில் விமானக்குண்டு வீச்சுக்கு அஞ்சி, நவாலித் தேவாலயத்திலும், வளாகத்திலும் குழந்தைகள், பெண்கள், ஆண்கள், முதியவர்கள் என்று ஆயிரக்கணக்கான மக்கள் தஞ்சமடைந்திருந்தபோது தேவாலயம், அகதிகள் என்றுகூடப் பார்க்காமல் இலங்கை விமானப்படை குண்டுவீசித் தாக்கியது. நூற்றுக்கு மேற்பட்டோர் மாண்டனர், பலர் ஊனமுற்றனர். இந்தத் தாக்குதல் முடிந்ததும், நூற்றுக்கு மேற்பட்ட ''பயங்கரவாதி''களைக் கொன்றுவிட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

இந்த அப்பாவிப் பொதுமக்கள் விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டது அரசுக்கும் தெரியும். பின்னர் இது நிரூபிக்கப்பட்டது.

இதேபோல் நாகர்கோயிலில் பாடசாலை மீது போர் விமானங்கள் குண்டுவீசி, கல்வி கற்றுக்கொண்டிருந்த அப்பாவிப் பிள்ளைகள் பலரின் உயிரைப் பலி எடுத்தது.

இந்த இரண்டு சம்பவங்களை உதாரணத்துக்காகச் சொல்கிறேன். இப்படி எத்தனை குண்டு வீச்சுக்கள்! எத்தனை உயிர்ப்பலி உடமைகள் அழிவு எத்தனை?

விமானம் வரும் ஓசை காதில் பட்டதுமே ''கோழ்மூட்டி வருகிறது'', ''சீனச்சட்டி வருகிறது'', ''பீப்பாய் வருகுது'' என்றும் பொதுமக்கள் பெயர் சொல்லி விடுவார்கள் அவ்வளவு பரிச்சயம்!

சிறிய விமானம் வந்த சிறிது நேரத்தில் பெரிய விமானம் வந்து குண்டுவீசித் தாக்கும்! இது மட்டுமல்ல, மனிதக் கழிவுகள்கூட பீப்பாய்க் கணக்கில் பெரிய விமானங்களிலிருந்து மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் உருட்டி விடப்படுவதும், பேரோசையைக் கிளப்பிக்கொண்டு விழும் இந்தப் பீப்பாய்கள் அந்தச் சுற்று வட்டாரத்திலுள்ளவர்கள் சுவாசிக்க முடியாமல் துர்நாற்றத்தை ஏற்படுத்துவதும், இதனால் பலர் மூச்சுத்திணறல் நோய்க்கு ஆட்பட்டதும், இப்பொழுது பலர் மறந்துவிட்டிருக்கலாம், விடுதலைப்புலிகள் பற்றிக் கண்டனமும் தெரிவிக்கலாம். ஆனாலும் விமானக் குண்டுவீச்சுக்களைப் பார்த்தவர்களும், அவற்றினால் பாதிக்கப்பட்டவர்களும் அந்த நாட்களை வாழ்நாளில் மறக்கமாட்டார்கள். இன்று விமானக்குண்டுவீச்சு நிறுத்தப்பட்டிருப்பதையும் மறக்க முடியாது.

ஆனால் இன்று புலிகளிடம் விமானம் இருக்கிறது என்று கேள்விப்பட்டதுமே, உதறல் எடுக்கும் பிக்குகளும்சரி மற்றும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும்சரி யாழ்ப்பாணத்திலும் மற்றும் தமிழர் தாயகப் பகுதியிலும் இலங்கை விமானப்படைப் போர் விமானங்கள் குண்டு வீசித்தாக்கி மக்கள் பலரைக் கொன்றபோதும் – கல்வி நிலையங்கள், கோவில்கள், மருத்துவ நிலையங்கள் அழிக்கப்பட்ட போதும் ஒரு குரலாவது அனுதாபம் தெரிவித்ததுண்டா?

மத்திய கிழக்கிலோ – ஐரோப்பாவிலோ ஒரு குண்டுவீச்சில் சிலர் கொல்லப்பட்ட செய்தி வெளிவந்ததும் இங்கிருந்து கண்டனமும், கவலையும் தெரிவித்து அறிக்கை வெளியிடுபவர்கள் கூட தமிழர் தாயகத்தில் போர் விமானங்கள் குண்டுவீசி மனிதப்படுகொலைகளை நடத்திய போது, கண்டிக்க வேண்டாம் கவலைகூடத் தெரிவிக்க எவரும் முன்வரவில்லை. அன்புதான் இன்ப ஊற்று என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்ட பிக்குகள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

இப்பொழுது விடுதலைப் புலிகளின் போர் விமானங்களை அதாவது – புலிகளின் விமானப்படையை அத்துடன் விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக இந்திய அரசுடன் இலங்கை ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்று ஹெல உறுமயத் தலைவர் எல்லாவெல மெத்தானந்த தேரர் அரசுக்கு கோரிக்கை விடுகின்றார்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு ரணில் விக்கிரமசிங்க சிங்கள இருந்தபோது எடுத்த முயற்சியை சந்திரிகா அம்மையார் இன்னமும் கைவிட வில்லை. இதில் கைச்சாத்திடலாமென்றுதான் இந்தியாவுக்குப் போயிருந்தார். இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றம் இங்கிருந்து ராஜீவின் மரணத்தை எப்படியெல்லாம் எடுத்துக் காட்டி உசுப்பேற்படுத்திய போதிலும் இன்றும் இந்தியா கவன மாகத்தானிருக்கிறது.

இலங்கைப் போர் விமானங்கள் தமிழர் தாயகத்தில் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் கண்மூடித் தனமாகக் குண்டுவீசி பல உயிர்களையும் பலியெடுத்த சமயங்களிலெல்லாம் இந்தியாவில் வெளிவிவகார அமைச்சராகவும், பின்னர் பிரதமராகவும் பதவி வகித்த ஐ.கே.குஜ்ரால் ஆழ்ந்த கவலையையும், கடும் கண்டனத்தையும் தான் வெளியிட் டாரே தவிர வேறு எதுவும் செய்யமுன்வந்ததில்லை !

இப்பொழுது விடுதலைப் புலிகளிடமுள்ள விமானங்களை அழிப்பதற்கு இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்ய இலங்கை கேட்டால், அது சம்மதித்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை!

என்றாலும் புலிகளின் விமானப்படைக்கு எதிராகப் பாகிஸ்தான் சக்திவாய்ந்த ராடார் கருவிகளைப் பொருத்தவும் மற்றும் இராணுவ உதவிகளுக்கும் தயாராகக் காத்துநிற்கிறது.

பாகிஸ்தானின் சக்தி வாய்ந்த ராடார் கருவி விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை மட்டும் தான் அவதானிக்குமா? அயலில் இந்தியாவின் நடவடிக்கைகளையும் அவதானிப்பதற்குப் பயன்படுமா ? என்பது இந்தியா சிந்திக்கவேண்டிய விடயம்.

இந்தியாவின் உதவியைப் பெறுவதில் இன்று சந்திரிகா அம்மையாரின் அரசும் முன்பு இந்தியாவை விரோதியாகப் பார்த்த ஜே.வி.பியும் ஆர்வம் காட்டுவது உண்மைதான். ஆனால் இது எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்.

கிழக்குப் பாகிஸ்தான் நெருக்கடியின் போதும் இந்திய, சீன எல்லை நெருக்கடியின் போதும், சந்திரிகாவின் அம்மை சிறிமா பண்டாரநாயகாவின் அரசு எப்படி நடந்து கொண்டது என்பதை இந்தியா மறந்திருக்காது. மறந்திருந்தாலும், சமீபகாலத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதி கொழும்பு வந்த சமயத்தில் இங்குள்ள அரச மற்றும் இனவெறி ஊடகங்கள் பாகிஸ்தான் அந்தச் சமயங்களில் இலங்கை மூலம் பெற்ற உதவிகளையும், பாகிஸ்தான் இலங்கைக்குச் செய்த உதவிகளையும் எடுத்துக்காட்டியிருந்தன.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் இவற்றைக் கவனித்திருக்குமென நம்பலாம். மகாத்மா காந்தி கொல்லப்பட்ட சமயத்தில் இலங்கையில் சிங்கள மக்கள் சுதந்திரதினத்தைக் கொண்டாடிய போது, தமிழர் தாயகம் மகாத்மா காந்திக்காக ஒரு மாதம் துக்கம் அனுஷ்டித்ததையும் மறந்து விட முடியாது.

எப்படியோ இந்தியாவுடன் ஜே.ஆர். ஒப்பந்தம் செய்து விடுதலைப் புலிகளைஒழித்துக்கட்ட இந்தியப் படைகளைப் பயன்படுத்தி அவர்களில் பலரைப் பலிகொடுத்து, சிங்களப் படையினரைப் பாதுகாத்தார்.

பிறேமதாசா இந்தியப் படைகளை இழப்புடன் திருப்பி அனுப்பினார். இப்போது சந்திரிகா இந்தியப் படைகளை அல்லது இந்திய விமானப்படையை பிக்குகள் ஆலோசனையில் கொண்டு வந்தாலும், தங்கள் தேவை முடிந்ததும் ஆட்சிக்கு வரும் சிங் கள அரசு என்ன செய்யும்?

எதுவும் செய்யலாம். இனியும் இந்தியா ஏமாறப் போகிறதா?

அரசியற்கட்டுரை

- புரணி -

# இணைப்பாட்சிக் கருத்துக்கணிப்பு நிராகரிக்கப்பட்டால் தனித் தமிழீழத்தைச் சந்திரிகா அங்கீகரிப்பாரா?



மக்கள் கருத்துக்கணிப்புப் பற்றிய செய்திகள் மீண்டும் செய்தி ஊடகங்களில் இடம்பெறத் தொடங்கியுள்ளன. இணைப்பாட்சியை (சமஷ்டி) எண்பது வீதமான மக்கள் விரும்புகின்றார்கள் என்று கூறும் சந்திரிகா - அதற்காக ஒரு கருத்துக் கணிப்பை நடத்தப்போகின்றார் என்பது ஒரு செய்தி. மற்றொரு செய்தி புதிய அரசியல் யாப்புக்கான கருத்துக் கணிப்பு நடத்தப் போகின்றார் என்பதாகும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத நிலையில், வெறுமனே மக்கள் கருத்துக்கணிப்பு மூலம் அரசியல் யாப்பைத் திருத்த முடியுமா என்பது பற்றிப் பலமுறை ஆராயப்பட்டுள்ளது. அது சாத்தியமானதல்ல என்பதுதான் யதார்த்த நிலையாகும்.

ஆனால் பதவியை விட்டு விலக முடியாத பேராசையால், மீண்டும் மீண்டும் மக்கள் கருத்துக்கணிப்பு மூலம் அரசியல் யாப்பைத் திருத்த அல்லது புதிய யாப்பைத் திணிக்கச் சந்திரிகா முயற்சிகளைத் தொடருகின்றார் என்பதே வெளிப்படையாகும்.

இது இவ்வாறிருக்க இனபபிரச்சினைக்குத் தீர்வுகாண, (சமஷ்டி) இணைப்பாட்சி முறைக்கு மக்களின் கருத்துக் கணிப்புப் பெறப்போவதாகக் கூறுகின்றார் சந்திரிகா. இதில் பல சூழ்ச்சிகள் அடங்கியுள்ளன.

இநதச் சூழ்ச்சிக்குள் தமிழ் மக்களைத் தள்ளி வீழ்த்திவிட்டுச் சிங்கள-பௌத்த மேலாண்மையை உறுதிப்படுத்துவதே அவரின் நோக்கமாகும்.

### தமிழ் மக்கள் அளித்த தீர்ப்பு

இன அடக்குமுறை தொடங்கிக் கொழுந்து விட்டெரியத் தொடங்கிய காலம் முதல், தமிழ் மக்கள் தமது தீர்ப்பை மிகத தெளிவாகவே காட்டி வந்துள்ளார்கள். 1956, 1960 மார்ச், 1960 யூலை, 1965, 1970 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத தேர்தல்களில் - தமிழ் மக்கள் இணைப்பாட்சியே வேண்டும் என்று தீர்ப்பளித்தார்கள்.

இந்தக் கருத்தும், கோரிக்கையும் சிங்கள ஆட்சியாளர்களால் நிராகரிக்கப்படவே, 1977 இல் தமது இழந்த இறைமையை மீட்டு, தமிழீழம் நிறுவுவதே தமது முடிவு என்று தமிழ் மக்கள் தீர்மானித்தார்கள்.

இதனை மீண்டும் 2004 இல் நடந்த தேர்தலிலும் உறுதிப்படுத்தியுள்ளனர். எனவே இணைப்பாட்சி வேண்டுமா? வேண்டாமா? என்று சிங்கள அரசு - தமிழ் மக்களிடம் கருத்தறிய வேண்டிய தேவை இபபோது இல்லை. இது ஏற்கனவே தமிழ் மககளால் தீர்மானிக்கப்பட்ட விடயமாகும். எனவே, சிங்கள அரசின் இந்த முயற்சி, தமிழ் மக்களைப் பொறுத்தவரை தேவையற்ற முயற்சி என்பதே கருத்தாக உள்ளது.

### இணைப்பாட்சி முறையில் எத்தனை வகை?

இணைப்பாட்சி முறைகள் - நாட்டுக்கு நாடு வெவ்வேறு வடிவங்களில் செயல்வடிவம் பெற்றுள்ளன.

ஐக்கிய அமெரிக்காவில் ஒரு வகையான அமைப்பு, கனடாவில் வேறு வடிவத்தில், முன்னாள் சோவியத் யூனியனில் இவற்றைவிட மாறுபட்ட முறைமை, சுவிற்சர்லாந்தில் இன்னொருவகை எனப் பல்வேறு நாடுகளில், பல்வேறு வடிவங்களில் இணைப்பாட்சி அரசியலமைப்பு நடைபெற்று வருகிறது.

இவை அந்த நாடுகளுக்கு ஏற்ற சிறந்த அமைப்புகளாக இருக்கின்றன. ஆனால் இந்தியாபோன்ற சில நாடுகளில் மத்திய அரசிடம் ஆட்சி, அதிகாரம் நிறைந்திருக்க - மாநிலங்கள் அதிகாரங்களற்ற ஆட்சியைக் கொண்டிருக்கின்றன. இவை கூடத் தங்களது இணைப்பாட்சி அரசியலமைப்பு நாடுகள் எனக் கூறி வருகின்றன.

எனவே, சந்திரிகா மக்களிடம் எந்த வகையான இணைப்பாட்சித் திட்டத்தை முன்வைக்கப் போகின்றார்? தமிழ் மக்கள் விரும்பும் தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பனவற்றை உள்ளடக்கிய ஆட்சியமைப்புப் பற்றிக் கருத்தறியத் துணிவாரா? இவைதான் முக்கிய கேள்விகள்.

இவற்றுககான விடைகளே தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்குப் பதில் கூறக்கூடியவைகளாகும்.

### இந்தியாவுடன் சேர்ந்து சதி நடவடிக்கை

இந்தியாவில் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் போதாது, மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி வேண்டும் என்ற குரல்கள் அடிக்கடி கேட்கும். இதற்காக அமைக்கப்பட்ட சர்க்காரியா ஆணைக்குழுகூட அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்



பட வேண்டும் என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளது. ஆனால, அங்குள்ள அரசியல்வாதிகள் தங்கள் அதிகார நலனில் அக்கறை காட்டாதமையாலும், தேர்தல் காலங்கள் தவிர மற்றைய காலங்களில் இதை மறந்திருப்பார்கள்.

இவ்வாறு அதிகாரமில்லாத மாநிலங்களுடைய இந்திய அரசியலமைப்பு போன்ற அல்லது அதனிலும் குறைவான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் அரசியமைப்பை, இணைப்பாட்சி என்றபெயரில் இங்கு தமிழ் மக்கள் மேல் திணிக்கவே சந்திரிகா புறப்பட்டுள்ளார் போல் தெரிகிறது.

### கதிர்காமரின் பங்கு

சந்திரிகாவால் இந்த முயற்சிக்கு உறுதுணையாக விளங்குபவர் கதிர்காமரேயாகும். இலங்கைத் தமிழர் தரப்பு நியாயங்களை மேற்குலக நாடுகள் உணரத்தொடங்கியுள்ளன. நோர்வே அனுசரணையாளராகப் பணியாற்றி வருகின்றது.

சிங்கள ஆட்சியாளர்களின் கபட நாடகத்தையும், உண்மையான நோக்கத்தையும் விடுதலைப் புலிகள் மேற்குலக நாடகளுக்குப் புட்டுப்புட்டு வைப்பதால், தமிழர்களின் கோரிக்கைகளின் நியாயத் தன்மையை அந்த நாடுகள் சரிவரப் புரிந்து கொள்கின்ற நிலைமை வளர்ந்து வருகிறது.

எனவே அந்த நாடுகளை அகற்றி விட்டு அல்லது கழற்றி விட்டு இந்தியாவை இதற்குள் இழுக்கக் கதிர்காமர் முனைப்புடன் செயலாற்றி வருகிறார். அடிக்கடி இந்தியாவுக்குச் சென்று, ஆட்சியாளர்களிடம் இல்லாததும், பொல்லாததும் கூறி எப்படியும் இந்தியாவை இதற்குள் இழுத்து விட அவர் பெரு முயற்சி எடுத்து வருகிறார்.

எனவேதான் இந்திய அரசியலமைப்புப் போன்ற பாணியில் தமிழீழத்து மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்ற மாயையில் கதிர்காமர் சந்திரிகாவுக்காகப் பாடுபடுகிறார்.


இந்தியாவும் தன் நலன் சார்ந்த விடயத்தில் ஏற்கனவே பயன்படுத்திய வரதராஜப் பெருமாளைக் கைவிட்டு, கதிர்காமர் போன்றோரைப் பயன்படுத்த விரும்புகிறது, பயன்படுத்துகிறது. தமிழீழ மக்களுக்குக் கதிர்காமரின் முகவரிகூடத் தெரியாது என்பதை இந்தியா எப்பொழுது புரியும் என்பதுதான் தெரியவில்லை. (தொடரும்...)

பகுதி ௦௨

சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே எம் நிலை உரையாயோ...





அதற்கு அவர் நீங்கள் ஏன் சின்னக கொட்டில்கள் அமைக்க வேண்டும்? வசதியாக பைப்புகள், தகரங்களுடன் ஓலை வீடுகளை அமைக்கலாமே?" எனக் கேட்டார். அதற்கு எமமிடம் நிதி வசதி இல்லையெனச் சுட்டிக்காட்டினோம். உடனே தமக்கு அருகிலிருந்த தம்பி எழிலனிடம் 150 கொட்டிலகளுக்கான முழு ஏற்பாடுகளையும் ஒழுங்கு செய்து கொடுக்குமாறு கூறினார்.

தொடர்ந்து இரு நாட்களின் பின்னர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வந்தனர். அவர்கள் மீள் குடியேற்றத்துக்கான இடங்கள், கிராம சேவை அலுவலர் பிரிவு முதலான தரவுகளை எம்மிடம் சேகரிததனர். எங்களுக்கும் இது விருப்பமே, எனினும் எமது பிரதேச செயலகம் காணிகளை இணங்கண்டு, அளநதுகொடுக்கக்கூடிய நிலையில் இல்லை. இதனால் மொத்தமாக 150 வீடுகளை அமைக்கக்கூடிய சூழ்நிலை இல்லை என்பதைச் சுட்டிக்காட்டினோம்.

இங்கு 200 மீற்றருக்கு அப்பால் ஓரளவு பாதிப்புற்ற இடங்களில் ஒரு வீட்டில் இரண்டு, மூன்று குடும்பங்கள் உள்ளன. எனவே அந்தந்தக் காணிகளில் கொட்டில்கள் அமைக்கலாம். நாங்கள் தமிழ்ச்செல்வனிடம் கம்பு, தடிகள்தானே கோரினோம், இப்ப நீங்கள் வீடமைக்க ஒதுக்கியுள்ள பொருட்களைத் தந்தால், நாங்கள் அவற்றை அமைத்துக் கொடுக்கிறோம்.

எமது பணிகள் குறித்து நீங்கள் நேரில் வந்து ஆராய்ந்து பார்க்கலாம் எனக் குறிப்பிட்டோம்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை உலமாசபை என்பது மிகவும் உயர்ந்தது. ஒரு அரசியல் தலைமைக்குக் கூட உத்தரவு போடும் அதிகாரம் உள்ளது. எமது மார்க்கத்தைப் பொறுத்தவரை மக்கள் மிகவும் பற்றுதல் உள்ளவர்கள். எனவே நீங்கள் வழங்கும் பொருட்களைக் கொண்டு எம்மால் சரியான முறையில் அழகான வீடுகளை அமைத்துக்கொடுக்க முடியும். ஏற்கனவே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பெற்ற உதவிப் பொருட்களை சரியான முறையில் விநியோகித்துள்ளோம்.

பொருட்களை எம்மிடம் கையளித்தால், அவற்றைப் பொறுப்பேற்றமைக்கான கடிதத்தைத் தருகிறோம். இந்த வீடமைப்பு பூர்த்தியானதும் திறப்பு விழாவின்போது அவற்றை நீங்கள் கையளிக்கலாம். மேலும் உதவிதேவைப்படுவோரின் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் இடம்பெற நாம் உதவுவோம்.

ஒரு வாப்பாவின் வீடு உடையாமலிருந்து மகனும், மகளும் அங்கு வந்து இருந்தால், அங்கேயே இந்தத் தற்காலிக வீடு அமைவதுதானே பொருத்தம்? ஒரே வீட்டுக்குள் சிரமப்படாமல் சந்தோஷமாக இருப்பார்களே? ஒரு நேரத்தில் இதனை விட்டுப்போவதென்றாலும் தகப்பனிடம் தானே வீடு இருக்கும்? இதனை நாம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் விளக்கினோம். எனினும், அவர்கள் காணிகளை இணங்கண்டு, முகாம் அமைப்பதிலேயே ஆர்வம் காட்டினர்.

தமிழ்ச்செல்வன் செய்யமுன்வரும் உதவிகளை தட்டிக்கழிக்க நாம் தயாரில்லை. எமக்கு இன உறவே மிகமுக்கியமானது. எனவே எமது அபிலாசைகளை, தேவைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் புரிந்துகொள்ள வேண்டுமெனக் கோருகிறோம் எனக் குறிப்பிட்டார்.

"மீள் குடியேற்றம் தொடர்பாக வேறு அமைப்புகள், அல்லது அரபு நாடுகள் தங்களுக்கு உதவவில்லையா?" எனக் கேட்டதற்கு "இதுவரைக்கும் எமது ஜமியத்துல் உலமா சபையின் ஊடாக வெளிநாட்டு உதவிகள் எமக்குக் கிடைக்கவில்லை. எனினும் **I.I.R.O** என்ற நிறுவனம் பைசல் நகர் என்னும் பகுதியில் ஒரு முகாமை அமைத்துள்ளது.

கிண்ணியா ஒரு பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையில் அரபு நாடுகளோ அல்லது வேறு நாடுகளோ முழுமையாகப் பொறுப்பெடுத்து எமக்கு உதவவேண்டும் என, மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம் எனக் குறிப்பிட்டார் ஹதியத்துல்லா. இந்தவேளை இபினுசு "முகாம் என்று அமைக்கும்போது சில பிரச்சினைகளையும் நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அரசின் தீர்மானப்படி முகாம்களின் படையினரிடம் ஒப்படைக்கப் படவேண்டும். அங்கு பொலிஸாரோ, இராணுவமோ அங்கு நிலை நிறுத்தப்படுவர். அந்த நிலையில் அவர்களுக்குத் தோதான குடியாளர்களை இனங்கண்டு, தோழமை கொண்டாடுவர். பின்னர் நாளடைவில் படையினருக்குப் பெண் தேடும் பணியை இந்தக் குடிகாரர்கள் தொடங்குவர். ஒரு வித்தியாசமான ஒரு சூழ்நிலை, அத்துடன், கலாசாரச் சீரழிவு இந்த முகாம்களால் உருவாகும். எனவேதான் முகாம் அமைப்புகளைத் தவிர்க்க நாம் விரும்புகிறோம். ஆகையால், எமது உணர்வுகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் புரிந்து கொண்டு தற்போது இருக்கும் இடங்களில் மேலதிக கொட்டில்களை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பு.

தமிழ்ச்செல்வன் தமிழ் - முஸ்லிம் உறவுகளை ஏற்படுத்துவதில் உறுதியாகவுள்ளதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஒரு மனிதன் பேசக்கூடிய பாஷை என்பது பெரிய உறவுப்பாலம். இந்த இன உறவைப் பேணுவதில் ஜமியத்துல் உலமாசபை மிகவும் உறுதியாகவுள்ளது. நாங்கள் இரு பகுதியினரும் ஒவ்வொருவரினதும் சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொண்டு, நிம்மதியாக வாழவேண்டும். எல்லா இனங்களிலும் துவேசங்களைத் தூண்டக்கூடிய மோசமான சிந்தனையுடைய மக்கள் இல்லாமலில்லை. அவர்களை இனங்கண்டு, அவர்களின் செயற்பாட்டை படிப்படியாகக் குறைக்கக்கூடிய வழிவகைகளை இரு தரப்பினரும் மேற்கொள்வோம்.

இதேவேளை. நாம் இந்த இரு இனத்தவரும் ஏமாந்து விடக்கூடாது என்பதைத் தமிழ்ச்செல்வன் வலியுறுத்தினார். குறிப்பாக இந்தப் பேச்சு வார்த்தைகள் குறித்த அவரது கருத்தை எம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது" எனக் குறிப்பிட்டார்.

மேலும் தலைவர் பிரபாகரன் சின்ன வயதில் கிண்ணியாவில் வாழ்ந்தவர்.

(தொடரும்...)

## தவக்கால நற்சிந்தனை

"நீங்களும் ஆயத்தமாயிருங்கள்." (மத். 24:44)



ஆண்டவருடைய வார்த்தையைப் பற்றிச்சிறிதளவும் சிந்திக்காமல், அதற்குச் செவிசாய்க்காமல் வாழ்ந்தால் நாம் அழிவுறுவது நிச்சயம். உலகம் தரும் இன்பமே போதும் என்றிருந்தால், அது பெரும் கேட்டினையே விளைவிக்கும். அண்மையில் நடந்து முடிந்த சுனாமி அழிவு நமக்கு ஒரு எச்சரிக்கை. எவருமே நினையாத நேர அழிவு. அவருடைய நாள் இதே போன்று நாம் அறியாத நேரத்தில் வந்தாலும், நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். தேவாதிதேவன் அன்பாயிருப்பதால், எவரையுமே புறம்பே தள்ளமாட்டார். அனைவரையும் பரலோகத்தில் சேர்த்துக் கொள்வார் என்ற விபரீத நினைவில், மீண்டும் மீண்டும் பாவங்களைச் சேமித்துக் கொண்டு, மனந்திருந்தாமல், சிந்தியாமல், தியானிக்காமல் வாழ்வோமானால் - விண்ணகத்தில் நுழைய முடியாது. எமது தப்பான, தவறான போக்குகளை மாற்ற வேண்டும். மரம் எந்தப் பக்கம் சரிகிறதோ, அந்தப்பக்கமே விழும் என்பதை அறிந்திருந்தும் - சிந்தியாமல் இருப்பது முறையா?

மோ.தார்சீசியஸ்

## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உ/த) பரீட்சை - 2005

# நேர அட்டவணை

| திகதி | மு.ப. | பி.ப. |
|---|---|---|
| 06.06.2005 திங்கள் | 0900 - 1200<br>10 இணைந்த கணிதம் - I<br>75 அரபு - I | 1300 - 1500<br>09 உயிரியல் - I<br><br>1300 - 1600<br>21 பொருளியல் - I<br>பகுதி - II 1300 - 1500<br>பகுதி - I 1500 - 1600 |
| 07.06.2005 செவ்வாய் | 0900 - 1200<br>09 உயிரியல் - II<br>21 பொருளியல் - II<br>பகுதி - II 0900 - 1100<br>பகுதி - I 1100 - 1200 | 1300 - 1600<br>53 பரதநாட்டியம் - I<br>55 கர்நாடக சங்கீதம் - I |
| 08.06.2005 புதன் | 0900 - 1200<br>10 இணைந்த கணிதம் - II<br>53 பரதநாட்டியம் - II<br>78 அரபு - II | 1300 - 1500<br>08 விவசாய விஞ்ஞானம் - I |
| 09.06.2005 வியாழன் | 0900 - 1200<br>30 கணக்கியல் - I<br>51 சித்திரம் - I | 1300 - 1600<br>55 கர்நாடக சங்கீதம் - II |
| 10.06.2005 வெள்ளி | 0900 - 1100<br>01 பௌதீகவியல் - I<br><br>0900 - 1200<br>30 கணக்கியல் - II<br>51 சித்திரம் - II | 1300 - 1600<br>08 விவசாய விஞ்ஞானம் - II |
| 11.06.2005 சனி | 0900 - 1200<br>01 பௌதீகவியல் - II<br>51 சித்திரம் - III | 1300 - 1600<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும் - I |
| 13.06.2005 திங்கள் | 0900 - 1200<br>72 தமிழ் - I | 1300 - 1600<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும் - II |
| 14.06.2005 செவ்வாய் | 0900 - 1200<br>72 தமிழ் - II | 1300 - 1600<br>28 மனைப் பொருளியல் - I |
| 15.06.2005 புதன் | 0900 - 1100<br>02 இரசாயனவியல் - I | 1300 - 1600<br>28 மனைப்பொருளியல் - II |
| 16.06.2005 வியாழன் | 0900 - 1200<br>02 இரசாயனவியல் - II | 1300 - 1600<br>29 வணிகக்கல்வி - I<br>பகுதி - II 1300 - 1500<br>பகுதி - I 1500 - 1600 |
| 17.06.2005 வெள்ளி | 0900 - 1200<br>13 பொது ஆங்கிலம் - I | 1300 - 1530<br>13 பொது ஆங்கிலம் - II |
| 18.06.2005 சனி | | 1300 - 1600<br>46 இந்து நாகரிகம் - I<br>47 இஸ்லாம் நாகரிகம் - I |
| 20.06.2005 திங்கள் | 0900 - 1200<br>25 வரலாறு - I<br>பகுதி - II 0900-1100<br>பகுதி - I 1100-1200 | 1300 - 1600<br>29 வணிகக்கல்வி - I<br>பகுதி - II 1300 - 1500<br>பகுதி - I 1500 - 1600 |
| 22.06.2005 புதன் | 0900 - 1130<br>12 பொதுச்சாதாரண பரீட்சை | 1300 - 1600<br>22 புவியியல் - I |
| 23.06.2005 வியாழன் | 0900 - 1200<br>22 புவியியல் - II<br>பகுதி - II 0900-1100<br>பகுதி - I 1100-1200 | 1300 - 1600<br>46 இந்துநாகரிகம் - II<br>47 இஸ்லாம் நாகரிகம் - II |
| 24.06.2005 வெள்ளி | 0900 - 1200<br>07 கணிதம் - I<br>11 உயர் கணிதம் - I | 1300 - 1600<br>22 புவியியல் - III<br>பகுதி - II 1300 - 1500<br>பகுதி - I 1500 - 1600 |
| 25.06.2005 சனி | | 1300 - 1600<br>73 ஆங்கிலம் - I |
| 27.06.2005 திங்கள் | 0900 - 1200<br>07 கணிதம் - II<br>11 உயர் கணிதம் - II | |
| 28.06.2005 செவ்வாய் | 0900 - 1200<br>23 அரசியல் விஞ்ஞானம் - I<br>பகுதி - II 0900-1100<br>பகுதி - I 1100-1200 | 1300 - 1600<br>73 ஆங்கிலம் - II |
| 29.06.2005 புதன் | 0900 - 1200<br>23 அரசியல் விஞ்ஞானம் - II<br>பகுதி - II 0900-1100<br>பகுதி - I 1100-1200 | 1300 - 1600<br>58 நாடகமும் அரங்கியலும் - I |
| 30.06.2005 வியாழன் | 0900 - 1200<br>31 வணிகக்கல்வி - I<br>58 நாடகமும் அரங்கியலும் - II | 1300 - 1600<br>42 இந்துசமயம் - I<br>43 கிறிஸ்தவ சமயம் - I<br>44 இஸ்லாம் - I |
| 01.07.2005 வெள்ளி | 0900 - 1200<br>31 வணிகக்கல்வி - II<br>58 நாடகமும் அரங்கியலும் - III | 1300 - 1600<br>42 இந்துசமயம் - II<br>43 கிறிஸ்தவ சமயம் - II<br>44 இஸ்லாம் - II |

# ஓரிசா மற்றும் மராட்டியத்தில் இரு நாட்களாக நில நடுக்கம்!



சுனாமி பேரலைகளை உருவாக்கிய பயங்கர நிலநடுக்கத்திற்குப்பிறகு இந்தியாவில் கடந்த 2 மாதமாக நிலநடுக்கம்ஏற்படுவது தொடர்கதையாகிவிட்டது. அதிலும் நேற்று முன்தினம் இந்தியாவின் பலபகுதிகளை நில நடுக்கம் குறிவைத்துத் தாக்கியது போல மக்கள் உணர்ந்தனர்.

முதலில் நேற்றுமுன்தினம் காலை அந்தமான் தீவுப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் அதிர்வை சென்னையில் இரு இடங்களில் உணர்ந்ததாக மக்கள் தெரிவித்தனர். எனினும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

நேற்றுமுன்தினம் பிற்பகல் மராட்டியம், கோவா, கர்நாடக மாநிலங்களில் 5.1 ரிக்டர் அளவுக்கு பூகம்பம் ஏற்பட்டது. இரண்டு தடவைகள் உருவாகி சில வினாடிகளுக்கு நீடித்த இந்தப் பூகம்பத்தால் நேற்று முன்தினம் வட மாநில மக்களிடையே பதற்றமும் பீதியும் ஏற்பட்டது.

மும்பையில் பல இடங்களில் அடுக்கு மாடிக் குடியிருப்பு மற்றும் அலுவலகங்களில் இருந்த மக்கள் உடனே அப்புறப்படுத்தப்பட்டனர். மும்பையில் நூற்றுக்கணக்கான வீடுகளில் விரிசல் ஏற்பட்டன. கோவா மற்றும் தென் கர்நாடகாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் இருபத்திரண்டு வினாடிகள் நீடித்ததாகத் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினமிரவு மராட்டியம், கர்நாடக மாநில மக்கள் அச்சத்துடனேயே இரவைக் கழித்தனர். எனினும் நேற்றுக்காலை வழக்கமான பணிகளை தொடங்கிய மராட்டிய மக்களை காலை 7.37 மணிக்கு ஏற்பட்ட நில நடுக்கம் மீண்டும் அதிர்ச்சியில் உறையவைத்தது.

நேற்றுமுன்தினம் நில நடுக்கம் மையம் கொண்டிருந்த கோய்னா பகுதியில் தான் நேற்றுக்காலையிலும் நில அதிர்வு உண்டானது. அது 4.2 ரிக்டர் அளவுக்கு பதிவாகியிருந்து.

கோய்னா பகுதியை மையமாகக்கொண்டு நேற்று முன்தினம் பிற்பகலிலிருந்து சிறுசிறு நில அதிர்வுகள் ஏற்பட்ட வண்ணமிருந்தன. இந்த நில அதிர்வுகளால் உயிர்களுக்கோ உடைமைகளுக்கோ எந்தப்பாதிப்பும் ஏற்படவில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

ஆனால் சதரா மாவட்டத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் பெரிய விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. தொடர்ந்தும் அங்கு பூமி அதிர்வதால் மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

ஒரிசா மாநிலத்தின் தென் மாவட்டங்களில் நேற்றுமுன்தினமிரவு திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. இரவு 11 மணிக்குப் பிறகு இரண்டு தடவைகள் அங்கு பூமி அதிர்வு ஏற்படடது. இந்த நிலநடுக்கம் 4.0 ரிக்டர் என்ற சிறிய அளவில் தான் பதிவானது.




### ஜார்கண்ட் மாநில சட்டசபையில்

# நம்பிக்கை வாக்கெடுப்பில் பி.ஜே.பி. அரசு வென்றது



(புதுடெல்கி)

ஜார்க்கண்ட் மாநில சட்டசபையில் நேற்று முதலமைச்சர் அர்ஜுன் முண்டா தலைமையிலான அரசாங்கம் மீது நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் - ஆதரவாக 40 பேரும் எதிராக 37 பேரும் வாக்களித்ததால், பி.ஜே.பி. தலைமையிலான அரசாங்கம் வெற்றிபெற்றது. இதன்மூலம் ஜார்க்கண்டில் நிலவிவந்த அரசியல் குழப்பம் ஒருவாறாகத் தீர்க்கப்பட்டது.

நேற்றுக்காலை 11 மணிக்கு சட்டசபை கூடியது. கூட்டம் தொடங்கியதும் தேர்தலை குரல் வாக்கெடுப்பு மூலம் நடத்தும்படி இடைக்கால சபாநாயகர் கிரிய முண்டா உத்தரவிட்டார். இதற்கு காங்கிரஸ் கூட்டணி எம்.எல்.ஏ.க்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

எனினும், வாக்கெடுப்பு மூலம் சபாநாயகர் தேர்தல் நடத்தப்பட்டது. அதில் காங்கிரஸ் கூட்டணி சார்பில் நிறுத்தப்பட்ட அஞ்சனா தேவியைவிட ஆளும் கூட்டணி வேட்பாளர் இந்தர்சிங் நாம்தாரி அதிக வாக்குகள் பெற்று சபாநாயகராகத் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டு உடனடியாக சபை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் 15 நிமிடம் கழித்து புதிய சபாநாயகர் இந்தர்சிங் தலைமையில் சபைகூடியது. அப்போது நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தும் தீர்மானத்தை முதலமைச்சர் அர்ஜுன் முண்டா வாசித்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த எம்.எல்.ஏக்கள் அமளியில் ஈடுபட்டார்கள்.

கூச்சல் குழப்பம் தொடர்ந்து நீடித்ததால் அரசுக்கு ஆதரவளிக்கும் உறுப்பினர்களை எழுந்து நிற்கும்படி சபாநாயகர் உத்தரவிட்டார். அவர்களது எண்ணிக்கையின் அடிப்படையில் 79 உறுப்பினர்கள் பங்கேற்ற சட்டசபையில் ஆளும் அரசுக்கு 40 உறுப்பினர்கள் ஆதரவு இருப்பதாகவும் அரசுக்கு எதிராக 37 வாக்குகள் விழுந்ததாகவும் தெரிவித்தார்.

இதையடுத்து நம்பிக்கை வாக்கெடுப்பில் அர்ஜுன் முண்டா அரசு வெற்றிபெற்றுவிட்டதாகவும் சபாநாயகர் அறிவித்தார். இதைத் தொடர்ந்து சபை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த; லங்கா சமசமாஜக் கட்சி தெரிவு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை தெரிவுசெய்வதென்று லங்கா சமசமாஜக் கட்சி தீர்மானித்துள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சியின் உயர்மட்டக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் கருத்துத் தெரிவிக்கையில் –

அடுத்து நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தமது வேட்பாளரைத் தெரிவுசெய்து பிரசார நடவடிக்கையையும் ஆரம்பித்துவிட்டது.

ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இதுவரையும் வேட்பாளரைத் தெரிவு செய்யாததும் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்காதிருப்பதும் முற்போக்குச் சிந்தனையுள்ள மக்கள் மனதில் கேள்வியாக உருவெடுத்துள்ளது.

இந்த விடயங்களை அனைத்தையும் கவனத்திலெடுத்த நாம், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவுசெய்ய வேண்டுமென முடிவெடுத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மனைவியை கொன்றவருக்கு 18 வருட கடூழியச் சிறை!

### வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(வவுனியா)

மனைவியை அடித்துக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட வவுனியா – சாஸ்திரி கூழாங்குளத்தைச் சேர்ந்தவருக்கு வவுனியா மேல்நீதிமன்றம் 18 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது.

வவுனியா – சாஸ்திரிக் கூழாங்குளத்தில் கடந்த 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி தனது மனைவியை அடித்துக் கொலை செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட கந்தன் நல்லையா (வயது 38) என்பவருக்கே 18 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தக் கொலை வழக்கு விசாரணைகளில் எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

அத்துடன் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதுடன் தண்டப் பணம் செலுத்தத் தவறினால் ஒரு வருட சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

தினசரி குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து மனைவியை அடித்துத் துன்புறுத்திவந்த குற்றவாளி – மனைவியான ஆனந்தராணியின் டயறியிலிருந்து எடுத்த ஆண் ஒருவரின் புகைப்படம் யாருடையது எனக் கேட்டு துன்புறுத்தியதாகவும் சாட்சியங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவ தினத்தன்று காலை 11 மணியளவில் புகைப்படத்தில் காணப்பட்ட ஆண் யார் எனக்கேட்டு மனைவியை அடித்து சித்திரவதை செய்ததுடன் சுத்தியலால் அவருடைய தலையில் தாக்கியதாக நேரில் கண்ட அவருடைய மகளான நிவேதிகா தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்து அயல் வீட்டுப் பெண்ணிடம் ஓடிச்சென்று இதுபற்றித் தெரிவித்தாகவும் அவர் கூறினார். அயல் வீட்டுப் பெண்மணி தனது சாட்சியத்தில் –

தான் சென்று பார்த்தபோது தண்ணீர் வேண்டுமெனக் கேட்ட இறந்தவரின் தலையில் இரத்தம் பெருக்கெடுத்ததைக் கண்டதாகவும் அவருக்குத் தண்ணீர் எடுத்து வரச் சென்றபோது ஆனந்தராணியை அவரது கணவர் கிணற்றில் தூக்கிப் போட்டுவிட்டு அவர் கிணற்றில் விழுந்துவிட்டதாகச் சத்தமிட்டதாகவும் தெரிவித்தார்.

அயலவர்களின் உதவியோடு கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட இறந்தவரின் உடலை மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றதையடுத்து சந்தேகத்தின் பேரில் கணவன் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

வவுனியா மாவட்ட நீதிமன்றில் நடைபெற்ற இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகளில் கொலைக் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டு மேலதிக விசாரணைக்காக வவுனியா மேல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்தப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் விசாரணைகளை நடத்தியதில் சாட்சியங்களின் அடிப்படையில் எதிரி சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட முறையில் குற்றவாளியென நிருபிக்கப்பட்டதையடுத்தே இந்தக் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

## பொதுக்கட்டமைப்பு...

அதில் அரசாங்கம் பொது கட்டமைப்புத் திட்டத்திற்கு, எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் இணங்காவிடின் போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து தமிமீழ விடுதலைப் புலிகள் விலகிக்கொள்ளக்கூடும் என்ற செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நோர்வே தரப்பினர் அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமற்ற ரீதியில் அறிவித்துள்ள தாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

எனினும், இதனை மறுத்துள்ள நோர்வேத் தூதரக பேச்சாளர் இது பிழையான தகவல் எனக்குறிப்பிட்டார்.

## போராளி வீரச்சாவு!

விழுப்புண் அடைந்திருந்த போராளியொருவர் வீரச்சாவடைந்தார். பூநகரி நல்லூரைச் சேர்ந்த மேஜர் நவக்குமார் (கதிரவேலு சந்திரமோகன்) என்பவரே ‹.ரச் சாவடைந்தவராவர்.

இவரது வித்துடல் நேற்றுக் காலை கோவிந்தன் கடைச்சந்தியில் அமைந்துள்ள சாள்ஸ்அன்ரனி சிறப்புப்படையணியின் மாவீரர் நினைவாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இன்று காலை 10 மணியளவில் இவரது வித்துடல் பூநகரிப் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின் நண்பகல் அளவில் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் புனித விதைகுழியில் விதைக்கப் படும்.

## மன்னார் பாலியல் வல்லுறவுச் சம்பவம்

# அடையாள அணிவகுப்பு 22ஆம் திகதி நடைபெறும்!

(மன்னார்)

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய ஈழத்தமிழ் பெண்ணொருவர் மணல்திட்டில் வைத்து பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்று மன்னார் நீதிமன்றில் நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி தமிழகத்திலிருந்து மீனவர்களின் உதவியுடன் தாயகம் திரும்பிய 50 ஈழத் தமிழ் அகதிகள் நடுக்கடலிலுள்ள மண்திடலொன்றில் இறக்கிவிடப் பட்டனர்.

நிர்க்கதியான நிலையில் இவர்கள் தவித்துக்கொண்டிருந்த சமயம் – அங்கு வந்த கடற்படையைச் சேர்ந்த மூவர் துப்பாக்கி மற்றும் கத்தி முனையில் இளம் பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதோடு நகைகளையும் கொள்ளையடித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து நேற்றுமுன்தினம் நீதிமன்றம், 24 கடற்படையினரையும் நேற்று அடையாள அணிவகுப்பில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தது.

பிரதான சாட்சியான பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்ட யுவதி தொடர்ந்தும் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதால் நேற்று நீதிமன்றில் ஆஜராகவில்லை. இதனையடுத்து அடையாள அணிவகுப்பு ஒத்தி வைக்கப்பட்டது.

## 16 அகதிகள் மன்னார் வந்தனர்

(மன்னார்)

தமிழக அகதி முகாம்களிலிருந்து தாயகம் திரும்பிய 16 ஈழத் தமிழ் அகதிகள் மன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு மீன்பிடிப் படகொன்றின் மூலம் தாயகம் நோக்கி வந்துகொண்டிருந்த ஈழத் தமிழ் அகதிகள் மன்னாருக்குச் சமீபமாக மணற்திட்டியில் இறக்கி விடப் பட்டனர்.

இவர்களை கடற்படையினர் கைதுசெய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்ததையடுத்து பொலிஸாரால் மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்த வேளை அவர்களது சொந்த இடத்துக்கு அனுப்புமாறு மன்னார் அரச அதிபருக்கு நீதிவான் எஸ்.என்.அப்துல்லா உத்தரவிட்டார்.

## பேச்சுக்கள் தேக்கமடை....

இடைநிறுத்தப்பட்டது. தேர்தல் ஒன்று நடைபெற்று புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இடைநிறுத் தப்பட்ட பேச்சுக்களில் இருந்து தொடராமல் புதிய நிபந்தனைகளை முன்வைக்கின்றது. இதற்கு நாம் மறுப்பு தெரிவித்தோம். ஏனெனில் புதிய அரசாங்கம் வரவர ஒவ்வொரு அரசாங்கத்துடனும் அவர்கள் முன்வைக்கும் நிபந்தனைகளுக்கு ஏற்ப நாம் பேச முடியாது.

குறிப்பாக தற்போது உள்ள அரசாங்கத்திற்கு பேச்சு வார்த்தையில் அக்கறை இல்லை வேறு நோக்கம் தான் உண்டு. ஜனாதிபதி முறையை மாற்றுவது, தேர்தல் முறையை மாற்றுவதே அவர்களின் சிந்தனை. எனவே, எம்மைப் பொறுத்த வரையில் சிங்கள அரசாங்கத்திற்கு தான் வெளிநாடுகள் அழுத் தம் கொடுக்க வேண்டும்.

50 வருடமாக அகிம்சை ரீதியாகவும் 20 வருடமாக ஆயுத ரீதியாகவும் போராடி எமக்கு என்ற கட்டமைப்பை உருவாக்கி, தன்னிச்சையாக இயங்கி கொண்டு இருக்கும் இந்த நேரத்தில், நாம் பேச்சு வார்த்தை ஒன்றுக்கு வந்திருப்பது போன்ற விட்டுக்கொடுப்பை விட பெரிய விட்டுக்கொடுப்பு ஒன்று இருக்க முடியாது.

இந்த நிலையில் சிங்கள தேசம் பொறுப்பற்ற விதமாக நடக்கின்றது. எனவே, வெளி நாடுகள் எம்மிடம் வந்து விட்டுக் கொடுக்க வேண்டும் என கூறமுடியாது. மூன்று வருட கால பேச்சுவார்த்தைகளில் தமிழர் தரப்பு என்ன இலாபத்தை கண்டது. சிங்கள தேசம் எம்மை அங்கீகரிக்கவில்லை. எனவே, தமிழ் மக்களாகிய எமக்குஇறுதித் தீர்வு ஒன்று கிடைக்கும் வரைக்கும் நாம் தமிழீழக் கோரிக்கையை கைவிட முடியாது.

நாங்கள் மனித உரிமை அடிப்படையிலேயே போராடுகின்றோம். கனடிய அரசாங்கம் விடுதலைப்புலிகளை தடைசெய்து சிங்களப் பேரினவாத சக்திகளின் பலத்தை அதிகரிக்குமானால் – தற்போது நடைபெறும் சமாதான பேச்சுக்கு கனடா அரசு ஆதரவு வழங்குகின்றது என்பதை நம்பமுடியாத நிலை தோன்றும் எனவும் தாம் தெரிவித்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கி.சிவனேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நோர்வே...

சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வேயை ஓரங்கட்டும் செயற்பாடுகள் கொழும்பு அரசியல் வட்டாரத்தில் முனைப்புப்பெற்று வருவதாகவும் – இது ஆபத்தான ஒரு கட்டத்துக்கு நாட்டைக் கொண்டுசெல்லும் என்றும் மூத்த இராஜதந்திரி ஒருவர் கருத்து வெளியிட்டார்.

## செய்தியாளர்கள் தேவை

நமது ஈழநாடு பத்திரிகையில் – பரந்தன், கண்டாவளை, விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஸ்கந்தபுரம், முழங்காவில், மல்லாவி ஆகிய இடங்களுக்கான பிரதேச செய்தியாளர்கள் தேவை.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 19.03.2005 சனிக்கிழமை காலை 10 மணிக்கு – இல 152, ஏ9 வீதி, கிளிநொச்சியிலுள்ள கிளைப்பணிமனையில் நடைபெறும் நேர்முகத்தேர்வுக்கு சமுகம் தரவும்.

– நிர்வாக இயக்குனர்

திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை
குருதி கழுவிய குவலயம்
(திருப்பாடுகளின் காட்சி)
17,18,19,20 மார்ச் 2005
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
(4 நாட்களுக்கு)
மன்ற அரங்கில்
மாலை 7.00மணி
கல்வாரி நோக்கிய இறைமகனின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-222 2393 -திருமறைக் கலாமன்றம்.

## அறிவித்தல்

தவிர்க்க முடியாத காரணத்தினால்
இன்று 16.03.2005 புதன்கிழமை
மணல் விநியோகம் நடைபெறமாட்டாது.
புதன்கிழமை குறிப்பிடப்பட்ட
மணல் அனுமதிப்பத்திரம் உடையவர்கள்
அடுத்தவாரம் புதன்கிழமை
மணலைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மணல் விநியோகப் பகுதி
உபய கதிர்காமம்
- நிர்வாகம்

இல்லம் சிறக்க இனிய இதழ்



சிரித்திரன்
பெப்ரவரி – மார்ச்
இதழ் வெளியாகிவிட்டது
உங்கள் பிரதியைப் பெற்றுக்கொள்ள
விரையுங்கள்
விலை ரூபா. 25 மட்டுமே
சிரியுங்கள்.....
சிரியுங்கள்....
சிரித்துக்கொண்டேயிருங்கள்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த. உயர்தரம் - மாதிரி வினாத்தாள் - 2005

## பகுதி I இந்து நாகரிகம்

*கீழ்வரும் வினாக்களிலுள்ள பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.*

1) "மூவகை வித்தை" என்ற பொருளில் வரும் "திரயீ வித்யா" என்ற சொல் குறிப்பது
அ) உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை
ஆ) இருக்கு, சாமம், அதர்வணம்
இ) இருக்கு, யசுர், சாமம்
ஈ) இதிகாசம், புராணம், தர்மசாஸ்திரம்

2) இந்து மதத்தின் "பிரதானமான நூல்கள் மூன்று" எனக் கருதப்படுபவை.
அ) இருக்கு, யசுர், சாமம்
ஆ) பிரமசூத்திரம், பகவத்கீதை, சிவரகசியம்
இ) இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம்
ஈ) வேதாந்தசூத்திரம், பகவத்கீதை, உபநிடதங்கள்

3) இந்து சமூக நன்மைக்காகப் பிரயோகிக்கப்படும் "பௌஷ்ரி கானி" எனும் மந்திரங்களைக் கொண்ட வேதம்
அ) இருக்கு ஆ) யசுர் இ) சாமம் ஈ) அதர்வணம்

4) சைவ சித்தாந்தத்தில் குணங்குறிகளைக் கடந்த இறைவனது இயல்பைச் சுட்டும் சொல்
அ) அவதாரம் ஆ) அநாதி இ) சொரூபம் ஈ) தடத்தம்

5) ஆதியும் அந்தமும் இல்லாத சிவதத்துவத்தை உணர்த்தும் வடிவம்
அ) நடராஜர் ஆ) இலிங்கோற்பவர் இ) தட்சணாமூர்த்தி ஈ) சந்திரசேகரர்

6) ஆன்மா பற்றிய இருமையின்மைக் கொள்கையை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டது
அ) அத்வைதம் ஆ) விசிட்டாத்வைதம் இ) துவைதம் ஈ) சித்தாந்தம்

7) தில்லைச் செடியைத் தலவிருட்சமாகக் கொண்ட தலம்
அ) காசி ஆ) கங்கை கொண்ட சோழேஸ்வரம்
இ) சிதம்பரம் ஈ) ஸ்ரீரங்கம்

8) உபநிடத தத்துவத்தை காலைப்பொழுதின் தூய ஒளிக்கும் சுத்தமான மாலைக் காற்றிற்கும் ஒப்பிட்ட அறிஞர்
அ) விவேகானந்தர் ஆ) மகாத்மாகாந்தி
இ) சேர்ஜோன் மார்ஷல் ஈ) மாக்ஸ்முல்லர்

9) சிவனின் நாமங்களானவை
அ) உருத்திரன், சங்கரன், சம்பு ,சதாசிவம், புருஷோத்தமன்
ஆ) ஈஸ்வரன், சங்கரன், சம்பு, சதாசிவம், வைத்தியநாதன்
இ) சிவன், சங்கரன், சுவாமிநாதன், தேவராசன், ஈசானன்
ஈ) சதாசிவன் ,சங்கரன், வேணியன், உருத்திரன், நாராயணன்

10) சைவசமயத்தில் இடம் பெறும் தெய்வங்கள்
அ) சிவன், விஷ்ணு, முருகன், பத்திரகாளி, துர்க்கை
ஆ) சிவன், வாசுதேவன், உமை, முருகன், கணபதி
இ) சிவன், தாரை, பலராமர், கணபதி, பார்வதி
ஈ) சிவன், திருமால், விநாயகர், வைரவர், கிருஷ்ணர்

11) திருத்தொண்டர் திருவந்தாதி ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி என்பவற்றைப் பாடியவர்
அ) காரைக்காலம்மையார் ஆ) சுந்தரர்
இ) நம்பியாண்டார்நம்பி ஈ) சம்பந்தர்

12) மகாபாரதத்தின் கதாபாத்திரங்களானவர்கள்
அ) கிருஷ்ணர், கர்ணன், விதுரன், சகுனி, தர்மராசன்
ஆ) குந்தி, திரௌபதி, காந்தாரி ,சூனி, தாடகை
இ) அர்ச்சுனன், அபிமன்யு, கடோற்கசன், சூனி, விதுரன்
ஈ) வீமன், விதுரன், விராடன், தசரதன், விபீஷணன்

13) மாண்டுக்ய உபநிடதத்தை விளக்கி மாண்டுக்ய காரிகை என்ற நூலை எழுதியவர்
அ) கோவிந்த பாதர் ஆ) கௌடபாதர் இ) சங்கரர் ஈ) பாதராயணர்

14) சீவன்முத்தி எனப்படுவது
அ) மாணவனாக இருக்கும் போது கிட்டுவது
ஆ) இல்லற நிலையில் கிட்டுவது
இ) உடலை விட்டு சீவன் நீங்கிய பின் கிடைப்பது
ஈ) இந்த உடலோடு இருக்கும் போதே பெறப்படுவது

15) முதலாம் இராஜேந்திரன் கட்டிய பெரியகோயில்
அ) தஞ்சைப் பெருங்கோயில் ஆ) சிதம்பரம்
இ) கங்கை கொண்ட சோழேஸ்வரம் ஈ) காஞ்சி கைலாசநாதர் கோயில்

16) வேதப் பாடல்களில் கூறப்படும் தேவர்கள்
அ) சூரியன், உருத்திரன், அக்கினி, வருணன், இந்திரன்
ஆ) வருணன், சூரியன், மித்திரன், முருகன், சிவன்
இ) இந்திரன், வருணன், உமை, கௌரி, காளி
ஈ) விநாயகர், உருத்திரன், விஷ்ணு, நாராயணன், வைரவர்

17) திருமறைகளில் அடங்கிய பாடல்களின் ஆசிரியர்களின் பெயர்களை மட்டும் கொண்டுள்ள தொகுதி
அ) காரைக்காலம்மையார், சேரமான்பெருமாள், அப்பர், சேந்தனார்
ஆ) அருணகிரிநாதர், நக்கீரர், மாணிக்கவாசகர், நம்பியாண்டார்நம்பி
இ) சம்பந்தர், சுந்தரர், அப்பர், உமாபதிசிவாச்சாரியார்
ஈ) அப்பர், மாணிக்கவாசகர், கல்லாடனார், சிவப்பிரகாசர்

18) சிந்துவெளி மக்கள் வழிபட்ட தெய்வங்கள்
அ) சிவன், அக்கினி ஆ) சிவன், முருகன்
இ) இந்திரன், வருணன் ஈ) சிவன், அம்மன்

19) கோபுரங்களின் வளர்ச்சிக் காலம் எனப்படுவது
அ) சோழர்காலம் ஆ) நாயக்கர்காலம்
இ) பல்லவர்காலம் ஈ) சங்ககாலம்

20) ஐந்தாம் வேதம் எனப்படும் பேரிலக்கியம்
அ) தேவாரம் ஆ) இராமாயணம்
இ) மகாபாரதம் ஈ) நாலாயிர திவ்ய பிரபந்தம்

***பின்வரும் வினாக்களில் அமைந்துள்ள வாக்கியங்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் பிழை (X) எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.***

21) சிதம்பரக் கோயிலின் பொன்னம்பலக் கூரையை பொன்னால் வேய்ந்தவன் முதலாம் இராஜேந்திரசோழன் ( )

22) பிரமம் உண்மைப்பொருள் இந்த உலகம் ஒரு தோற்றமே ஒவ்வோர் ஆன்மாவும் பிரமம்தான் வேறொன்றும் இல்லை என்றவர் சங்கரர். ( )

23) தன்னலமற்ற சேவைமார்க்கம் எனப்படுவது பக்தியோகம். ( )

24) பக்திக்கு ஆழ்ந்த இறைபற்று எனப் பொருள் கூறியவர் மனு. ( )

25) வேதத்தின் இறுதி எனும் பொருளைச் சுட்டிநிற்பது சித்தாந்தம். ( )

26) விதிநூல்கள் எனப்படுபவை ஸ்மிருதிகள். ( )

27) மாணவ தர்மசாஸ்திரத்தின் ஆசிரியர் நாரதர். ( )

28) புல் முதல் பிரமம் ஈறாக எப்பொருளும் கிருஷ்ணனே என சாக்த தந்திரங்கள் கூறுகின்றன ( )

29) உள்பொருள் என்பது இருமையற்ற பரம்பொருளே. ஆனால் அது வேற்றுமையற்ற ஒரே சீரான பொருளன்று உள் வேறுபாடுடைய ஒரே உயிரினத்தைப் போன்று அமைவது எனக் கூறியவர் இராமானுஜர். ( )

30) காஷ்மீர சைவத்தின் தத்துவ முறைக்குப் பெயர் சக்தி விசிட்டாத்வைதம். ( )

31) திருமுறைகண்ட புராணம் சேக்கிழார் புராணம் எனும் நூல்கள் இயற்றியவர் சேக்கிழார். ( )

32) பக்திப் பாடல்களைப் பாடியருளிய சேரமன்னர்களில் சேரமான் பெருமான் குலசேகர ஆழ்வார் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். ( )

33) சிவலிங்கம் சிவனது அருவத் திருமேனியாகும் ( )

34) வேதத்தில் இடம்பெறும் ரிதம் பற்றிய சிந்தனையே இந்துதர்மக் கோட்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்தது. ( )

35) அத்திரி, அகஸ்தியர், வாமதேவர், வசிஷ்டர் முதலியோர் வேதகாலத்து இருஷிகள் அல்லர் ( )

36) சைவசித்தாந்தம் என்ற பெயர் வழங்கத் தொடங்கிய காலத்தை நிர்ணயிக்க பல்லவர் காலக் கல்வெட்டு உதவுகின்றது. ( )

37) நாயக்கர் காலம் கோபுரங்களின் வளர்ச்சிக்காலம் எனக் குறிப்பிடுகின்றது. ( )

38) மத்ஸயபுராணம், பாகவதபுராணம், பிரமாண்டபுராணம் ஆகியன சிவபுராணங்களாகும் ( )

39) பிரசாதம் என்னுஞ் சொல் கோவிலைக் குறிக்கும் பெயர்களில் ஒன்றாகும். ( )

40) வேதாந்த சூத்திரம் மகாபாரதத்தின் பகுதிகளில் ஒன்றாகும். ( )

***மேல்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.***

41) இந்துக்கள் தவிர்க்க வேண்டிய பஞ்சமாபாதகங்கள் எவை?
......................................................................

42) சனாதன தருமம் என்பதன் பொருள் யாது?
......................................................................

43) வைதீகதருமம் என்பதன் பொருள் யாது?

..........................................................................................

44) பிரமத்தின் இருமை அற்ற நிலை உலகத்தின் உண்மையற்ற நிலை பிரமத்திலிருந்து ஆன்மா வேறுபடாத நிலை எனும் உண்மை வலியுறுத்தும் தத்துவம் யாது?

..........................................................................................

45) பரசமயிகளின் கண்டனங்களை நிராகரிக்கும் முகமாக ஆறுமுகநாவலர் எழுதிய இரண்டு நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

..........................................................................................

46) சனாதன தர்மம் என்பதன் பொருள் யாது?

..........................................................................................

47) வைதீக தர்மம் என்பதன் பொருள் யாது?

..........................................................................................

48) தரிசன இலக்கியம் எவை?

..........................................................................................

49) ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட விதிகளை வாழ்க்கையின் அனுபவங்களில் சரியாக அனுசரித்த ஒரு நாட்டு பெருமக்களின் வீரதீரச் செயல்களைப் பாடல் வடிவில் சொல்லும் கதைகள் எவை?

..........................................................................................

50) நம்மாழ்வாரால் பாடப்பட்ட பிரபந்தங்கள் இரண்டு தருக?

..........................................................................................

51) ஓவியம் எனும் சொல்லின் பொருள் யாது?

..........................................................................................

52) நடராஜர் வடிவம் உணர்த்தும் தத்துவங்கள் யாவை?

..........................................................................................

53) சிற்பக்கலை பற்றிக் கூறும் புராதனமான மூன்று நூல்களைக் குறிப்பிடுக?

..........................................................................................

54) திருமுறைப் பாடல்களில் சிறப்பித்துக் கூறப்படும் பெண்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக?

..........................................................................................

55) சைவசித்தாந்தம் சித்சக்தி பற்றி கூறும் விளக்கம் யாது?

..........................................................................................

56) தென்திசை மேரு எனச் சிறப்பிக்கப்படும் கோயில் எது?

..........................................................................................

57) இந்து ஒழுக்கவியல் சார்ந்த பண்புகள் யாவை?

..........................................................................................

58) இந்துக்களின் பொருளியற்கோட்பாடு பற்றிக் கூறுக?

..........................................................................................

59) காஞ்சிப்புராணத்தின் நூலாசிரியர் யார்?

..........................................................................................

60) குமாரசம்பவம், மேகதூதம், இருதுசம்காரம், ரகுவம்சம் எனும் காவியங்களின் ஆசிரியர் யார்?

..........................................................................................

*பின்வரும் வினாக்களில் வரும் இடைவெளிகளைப் பொருத்தமான சொற்களினால் நிரப்புக.*

61) தேவசபை ................................, சிற்சபை ................................, நிருத்தசபை என்பன சிதம்பரத்தில் உள்ள ஐந்து சபைகளாகும்.

62) வேதத்தில் உள்ள மத ஆசாரம் பற்றி பகுதி ................................ எனவும் தியானத்திற்குரிய பகுதி ................................, எனவும் அறிவுதரும் பகுதி ................................, எனவும் அழைக்கப்படும்.

63) சைவசித்தாந்த விதிமுறைகள் பற்றிய நூலைத் தொகுத்தவர் ................................, அத்தொகுப்பு ................................, எனப்படும்.

64) தூய்மை, தன்னடக்கம், பற்றின்மை, சத்தியம், அஹிம்சை என்பன ................................, ஆகும்.

65) உலக உற்பத்திக்கான முதற்காரணம் என்று மத்துவரால் கொள்ளப்படுவது ................................, ஆகும்.

66) இந்திரன் வரையாது வழங்குபவன் என்பதனால் ................................, எனவும் நூறு யாகம் செய்தவன் என்பதனால் ................................, எனவும் அழைக்கப்படுவான்.

67) ................................, ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பெற்றதனால் ராஜகோபுரங்கள் என வழங்கப்படுகின்றன.

68) மாமல்லபுரத்துச் சிற்பம் சித்தரிக்கும் காட்சி ................................, எனப்படும்.

69) சைவசித்தாந்த சாஸ்திரங்களில் மிகப்பிரதானமான நூல் ................................, அதன் ஆசிரியர் ................................, ஆவர்.

70) ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமலிருந்த படியே மாறிவிட்டதாகக் காணப்படுவதற்கு சங்கரர் குறிப்பிடும் பெயர் ................................, என்பதாகும்.

71) சைவத்தில் கோயில் எனப்படும் தலம் ................................, அவ்வாறே வைணவத்தில் கோயில் எனப்படும் தலம் ................................, ஆகும்.

72) ................................, இந்தி மொழியிலே பாடிய இராமர்கதை பக்திரசம் கனிந்தது. ஞானமொழி பேசுவது.

73) கோயில் கட்டிடக் கலையில் வல்லவன் ................................, எனப்படுவான்.

74) வாய்மையே அறமாகக் கொண்டு வாழ்ந்தவர் ................................, இவரை நவபாரதம் தேசபிதாவாகக் கொள்ளுகின்றது ................................, எனப்படும்.

75) உபநிடதங்களின் சாரம் ................................, எனப்படும்.

76) பிரமோற்சவம் என்பது ................................, குறிக்கும்.

77) இந்துக்கல்வி மரபிற் கல்வி போதிக்கக் கையாண்ட வழிமுறைகளில் ................................, ஒன்றாகும்.

78) இலங்கையில் சோழராட்சியில் ஜனநாத மங்களம் என அழைக்கப்பட்ட நகரம் ................................, ஆகும்.

79) கிழக்கிலங்கையின் விடிவெள்ளி எனத் தோன்றியவர் ................................, இவர் நல்லை நகர் ஆறுமுகநாவலர் வழியில் நற்பணி புரிந்தார்.

80) சிவபெருமான் முப்புரங்களையும் எரித்த தலம் ................................, ஆகும்.

# க.பொ.த. உயர்தரம் - மாதிரி வினாத்தாள் - 2005

## பகுதி II இந்து நாகரிகம்

*★ முதலாம் வினா தொடக்கம் பத்தாம் வினா வரையிலான வினாக்கள் விருப்பத்துக்குரியவை. அவற்றுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.*

1. இந்துநாகரிக வளர்ச்சியில் புராணங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தினை மேல்வரும் விடயங்கள் குறித்து ஆராய்க.
   ஆ) கடவுள் வழிபாடும், சமயப் பிரிவுகளும் ஆ) இலக்கிய மரபுகள்
   இ) பக்தி நெறி ஈ) வழிபாட்டு முறைகள்

2. கீழ்வருவன தொடர்பாக பகவத்கீதை பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க.
   அ) வேதாந்த மரபு
   ஆ) வைணவ வளர்ச்சி
   இ) இந்துக்களின் ஒழுக்க நெறி

3. கௌமாரம் அல்லது சாக்தம் தொடர்பாக கீழ்வருவனவற்றைத் தெளிவுறுத்துக.
   அ) தோற்றமும் வளர்ச்சியும் ஆ) நூல்கள்
   இ) தத்துவ சிந்தனைகள் ஈ) சமுதாய செல்வாக்கு

4. சோழர் காலத்தில் சைவசமயத்தில் ஏற்பட்ட பிரதானமான வளர்ச்சிகளை கீழ்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.
   அ) திருக்கோயில்கள் ஆ) சைவ இலக்கியம்
   இ) படிமக்கலை ஈ) அரச ஆதரவு

5. தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப்பண்பாடு பரவியவற்றைப் பற்றி ஓர் கட்டுரை வரைக.

6. வேதாந்த மரபு, வைணவ சம்பிரதாயம், திருவரங்கம் என்பவற்றின் அடிப்படையில் இராமானுஜரது சாதனைகளை மதிப்பீடு செய்க.

7. பல்லவர் கால இந்துசமய வளர்ச்சியை கீழ்வரும் அம்சங்கள் குறித்து விளக்குக.
   அ) அரசர் பின்பற்றிய கொள்கைகள் ஆ) பக்தி நெறி
   இ) ஆலய வழிபாடு ஈ) இலக்கிய மரபு

8. கீழ்வருவன தொடர்பாக சுவாமி விவேகானந்தரின் பணிகளை விளக்குக.
   அ) வேதநெறி விளக்கம் ஆ) இந்து சமய மறுமலர்ச்சி
   இ) சமய நிறுவனங்கள்

9. இலங்கையில் இந்துசமயத்தில் பௌத்தம் செலுத்திய செல்வாக்கினை மதிப்பீடு செய்க.

10. கீழ்வருவனவற்றில் எவையேனும் நான்கினைப் பற்றி சுருக்கமான குறிப்பு எழுதுக.
   அ) திருவருட்பயன் ஆ) சிதம்பரம்
   இ) ஆதீனங்கள் ஈ) நவீனகால சீர்திருத்த இயக்கங்கள்
   உ) கந்தபுராணம் ஊ) சதுர்வேதி மங்களம்
   எ) வடநாட்டு பக்திநெறி ஏ) முன்னேஸ்வரம்.

*திரு. ப. ஜோதீஸ்வரன் **BA Dip. in. Edu***
*ஆசிரியர் யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை.*